விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 11 சனிக்கிழமை (23.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066

## முல்லையில் பிறந்திருந்தால் தமிழ்ப் புலியாகியிருப்பேன்

### சிறையில் மனோவிடம் தெரிவித்தார் அத்தே ஞானசார தேரர்

(கொழும்பு)

முல்லைத்தீவில் பிறந்திருந்தால் ஒரு தமிழனாக, புலியாகிப் போராடியிருப்பேன் என பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். 23☛



## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் கவனயீர்ப்பு, முழு அடைப்பு போராட்டத்துக்கு

### யாழ். பல்கலைக்கழக சமூகம் முழு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரினால் எதிர்வரும் திங்கட்கிழமை நடத்தப்படவுள்ள கவனயீர்ப்பு மற்றும் முழு அடைப்பு போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக சமூகம் தனது பூரண ஆதரவை தெரிவிப்பதாக தமது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரிற்கு நீதி வேண்டியும் 25.02.2019 இல் ஆரம்பமாகும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வினை முன்னிறுத்தியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் எதிர்வரும் திங்கட்கிழமை அன்று முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்பு போராட்டத்திற்கும், முழு அடைப்பிற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் பூரண ஆதரவு நல்குவதோடு 23☛

# 19வது அரசியலமைப்பு திருத்தம் வரலாற்று சிறப்புமிக்க சட்டம்

### ஜனநாயகத்தை மதிக்காதோர் விமர்சிக்கின்றனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு) 19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக கட்சி பேதமின்றி நிறைவேற்றப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க சட்டம் எனவும் அதனை விமர்சிப்பதன் மூலம் யாருக்கு ஜனநாயகம் அவசியம் இல்லை என்பதை தெளிவாக காண முடிவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

## ஊடகத்துறை அமைச்சராக ருவான் விஜேவர்தன நேற்று பதவியேற்பு



(கொழும்பு)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன அமைச்சரவை அந்தஸ்தற்ற ஊடகத்துறை அமைச்சராக நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப் பிர 24☛

## மன்னார் புதைகுழி காபன் பரிசோதனை அறிக்கை தாமதமாகும்

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகளின் காபன் அறிக்கை மேலும் தாமதமாகும் என காணாமல் போனவர்களிற்கான பணியகம் தெரிவித்துள்ளது.

மன்னார் நுழைவாயிலின் சதொச வளாகத்தில் அடையாளம் காணப்பட்ட மனித புதைகுழியின் 6 மாதிரிகள் அமெரிக்கா 23☛

## வாள்வெட்டுக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### தருமபுரம் சம்புக்குளத்தில் சம்பவம்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலைய பிரிவிற்குட்பட்ட தருமபுரம் 2ம் யூனிட் சம்புக்குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் வாள்வெட்டுக்காயங்களுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை நேரத்தில் இடம்பெற்றுள்ளது. 23☛



## மணல் தட்டுப்பாட்டுக்கு தீர்வு பெற்றுத்தருவேன்

### ஜனாதிபதியுடன் பேசுவதாக யாழில் திஸ்ஸ விதாரன உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மணல் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடி உரிய தீர்வினை விரைவில் பெற்றுத் தருவதாக பேராசிரியர் திஸ்ஸ விதாரன உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் மணல் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள் 23☛

## போரில் ஏற்பட்ட தாக்கத்தை ஏற்க வேண்டிய சமூகமாக நாம் இருக்கின்றோம்!

### வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

வரலாறு எமக்கு கொடுத்த சில கட்டளைகளினாலே எங்கள் சமுதாயம் தனக்கு புரிந்த விதத்தில் எடுத்த சில தீர்மானங்களினால் ஒரு போர் உண்டாகிற்று. 23☛



### யாழில் குடியேறியுள்ள

## சிங்களவரின் பிரச்சினை

### தீர்க்கப்படும் - சம்பிக்க

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள மேல்மாகாண அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று நாவற்குழி விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அங்கு, விகாராதிபதி 23☛

## இனப்படுகொலையை நாம் ஒருபோதும் மறக்க முடியாது

### - அமைச்சர் மனோ கணேசன்

(கொழும்பு)

தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலையினை மறக்க முடியாதென்றும், மன்னிப்பது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களே தீர்மானிக்க முடியுமென இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 24☛



# துயர் பகிர்கின்றோம்...



பிறப்பு 1952 07 27

இறப்பு 2019 02 21

## அமரர் கோவிந்தபிள்ளை பத்மநாதன்

யாழ் நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும் திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது இல்லக் குழந்தைகளின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுக்கு உணவளித்து கல்வி மற்றும் ஏனைய துறைகளில் எமது இல்லக் குழந்தைகள் மேம்பட அயராது உதவியவருமான அமரர் கோவிந்தபிள்ளை பத்மநாதன் அவர்கள் 21.02.2019 (வியாழக்கிழமை) அன்று சிவபதமடைந்த செய்திகேட்டு ஆறாத் துயரடைகின்றோம்.

ஆலம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவுகள் கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்துவிடாதிருக்க
வேரென இருந்தீரே ஐயா!

மாயப் புயல் வடிவினில்
காலனவன் இன்னுயிர் பறிக்க
சோகத்தை தந்துவிட்டு
சொல்லாமல் சென்றதென்ன?

(C-5591)

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்கள் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்- பொன். நித்தியானந்தம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.


## கடை தொகுதி வாடகைக்கு

நெல்லியடி நகரில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் பெற்றோல் நிலையம் முன்பாகவுள்ள நாற்சந்தியில் வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய நான்கு கடைகள் வாடகைக்கு விடப்பட இருக்கின்றன. வங்கிகள், நிதிநிறுவனங்கள், வர்த்தகப் பெருமக்கள் உடன் தொடர்பு கொள்ளவும். **T.P : 077 936 1356, 072 742 3767** (7630)




## யாழ் மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

Reg. No. : 8232

T.P: 021 320 5722

40. முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

## ஓட்டோ உரிமையாளர்கள் மற்றும் பயணிகளுக்கான அறிவித்தல்


தற்போது எமது சங்க கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டோக்கள் உரிய தரிப்பிடத்தில் வாடகைக் கட்டண மீற்றர் பொருத்தி சேவையில் ஈடுபடுகின்றன. மீற்றர் பொருத்தாதவர்கள் எமது சங்கத்துடன் தொடர்பு கொண்டு மீற்றர் பொருத்தவும்.

மேலும் பயணிகள் தங்கள் பயண தேவையை பூர்த்தி செய்ய தரிப்பிடத்தில் மீற்றர் பொருத்திய ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்துவதோடு, உடன் மீற்றரை செயல்பட வைக்குமாறு தாங்கள் சாரதிகளுக்கு தெரிவிக்கவும்.

மேலும் ஓட்டோக்களுக்கு எமது சங்கத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட நிறுவனத்தில் மீற்றர் பொருத்துவதே பயன் உள்ள தாகும்.

– நிர்வாகம்

(C-5592)



# மரண அறிவித்தல்

## ஸ்ரீமான் பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு

(மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா)

மண்டைதீவைச் சேர்ந்த ஸ்ரீமான் பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு அவர்கள் கடந்த 21.02.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - நாகரத்தினம் (வேலணை) தம்பதியரின் அருமை மகனும், இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் (ஆயுள்வேத வைத்தியர்) சின்னத்தங்கச்சி அவர்களின் அருமை மருமகனும் மற்றும் பராசக்தியின் ஆருயிர் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா (சிறாப்பர் - வேலணை), இரத்தினசபாபதி (தபால் அதிபர் அல்லைப்பிட்டி) மற்றும் இராசம்மா (பிரான்ஸ், காலஞ்சென்ற செல்வலெட்சுமி மற்றும் புவனேஸ்வரி (பிரான்ஸ்), மங்கையற்கரசி (அசுவதி - அல்லைப்பிட்டி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், விநாயகமூர்த்தி (ஓய்வூதியர்), சத்தியமூர்த்தி, லோகேஸ்வரி, (முன்னாள் சி.க.கூ.ச சமாசகல்வி உத்தியோகத்தர் - சுவிஸ்), லோகநாதன் (ரவி - கனடா), ரகுநாதன் (மோகன் - முகாமையாளர் பெற்றா எசன்ஸ் சப்பிளையர்), கேதாரநாதன் (சேகர் - கொழும்புத்துறை), காலஞ்சென்ற பஞ்சாட்சரநாதன் (வரதன் - கோட்டக்கல்வி அலுவலகம் வேலணை), விக்கினேஸ்வரி (அரசி - பிரான்ஸ்), நாகேஸ்வரி (வசந்தி - பிரான்ஸ்), ஜெகநாதன் (ஜெயம்), ஜெகதீஸ்வரி (ஜெயந்தி), செந்தில்நாதன் (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும், கோமளவள்ளி, இரகுநாதன் (சுவிஸ்), ரதனி (கனடா), கீதா, அனுஷா, கலைவாணி, இளஞ்செழியன் (ரமேஸ் - பிரான்ஸ்), காலஞ்சென்ற லோகேந்திரா (லோகு - பிரான்ஸ்), நகுலேஸ்வரி, பிரபாகரன் (விரிவுரையாளர் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி), விஜிதா (யசோ - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சலசா - சஞ்சு, சலோஜனன் - சுகுனேஸ்வரி, வேனுஷா - பிரணவன், பாலலோஜனன் ***(VTA-Jaffna)***, கோபிஷா, லம்போதரன், சிந்துஜன் (சுவிஸ்), இராகவன், இராகுலன், நிரோஜன் (கனடா), கோசிகா ***(Engineering Faculty, Moratuwa)***, தனுசிகா, சரணியா, சரண், ராகினி, விநோதினி, கௌசிகன், காரணன், கஜசரவணன், கஜனி, பாலகஜன், கௌசிகி (பிரான்ஸ்), சங்கவி, சயித்தன், சங்கவை (பிரான்ஸ்), சிவசங்கரி, ஆதித்யன், சிவனியா, ஹாரணி ***(Engineering Faculty, Moratuwa)***, கபிலேஷ், பவதாரணி, தாமிரா, அகர்வின், றனுசிகா ஆகியோரின் அன்பு பேரனும், சசிகாந், லக்ஸ்மி, விலோசன் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (24.02.2019) நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, மாலை 3.00 மணியளவில் பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| | - 00942214630 |
| மகன் விநாயகமூர்த்தி | - 0094778447780 |
| மகன் இரகுநாதன் | - 0094776384031 |
| மருமகன் இரகுநாதன் | - 0041627522577 |
| மகன் செந்தில்நாதன் | - 0016476934195 |
| மகள் நாகேஸ்வரி | - 0033143383001 |
| மருமகன் இளஞ்செழியன் | - 0033651067299 |

தகவல் : குடும்பத்தினர்

(C-5594)

## காணாமல்போன எவருக்கும் இதுவரை மரணச்சான்றிதழ் வழங்கப்படவில்லை-அரசு

(கொழும்பு)

காணாமல் போனதாகக் கருதப்படும் எந்தவொரு நபருக்கும் இதுவரை மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லையென உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது முஹம்மது நசீர் எம்.பி. யால் உள்ளக, உள்நாட்டு அலுவல்கள் ,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தனவிடம் காணாமல் போனோர் சார்பாக பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மரணச் சான்றிதழ்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக எத்தனையுள்ளதெனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

எனினும் முஹம்மது நசீர் எம்.பி சபையில் இருக்காததன் காரணமாக அரசு தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக்க, உள்ளக உள்நாட்டு அலுவல்கள்.மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தன சார்பில் பதிலை சபா பீடத்தில் சமர்ப்பித்தார்.

அந்தப்பதிலிலேயேகாணாமல் போனதாகக்கருதப்படும் எந்தவொரு நபருக்கும் இதுவரையில் மரணச் சான்றிதழ் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### ‘இராணுவ அரசு எமக்கு வேண்டாம்’

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்த்து கவனயீர்ப்பு போராட்டம்




(ஏறாவூர்)

புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்த்து மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் என இரண்டுமே வேண்டாமென கோரி மட்டக்களப்பு மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில், பூங்காவிற்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஒன்று கூடிய நூற்றுக்கணக்கான பொது மக்கள், புத்திஜீவிகள் மற்றும் மதகுருமார்கள் நடைமுறையிலே உள்ள குற்றவியல் சட்டம் போதுமானது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் என்பன வேண்டாமென வலியுறுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களே நாட்டின் பாதுகாப்பு என்று ஜனநாயகத்தை விற்றுவிடாதீர்கள், இராணுவ அரசு எமக்கு வேண்டாம், தேவையற்ற கைது, பொலிஸ்,இராணுவ அதிகாரம் வேண்டாம் போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறும் கோசம் எழுப்பியவாறு சுமார் 2 மணித்தியாலங்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் ஆர்.வசந்தராஜா, சர்வதேசம் உட்பட பலரும் இந்த சட்டத்தை எதிர்த்த நிலையிலும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் இதுவரையில் நீக்கப்படவில்லையென குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-7)

### கண்டி குண்டகசாலை

## சிறையிலிருந்து தப்பிவந்த கைதியே சாவகச்சேரியில் கொள்ளையிட்டவர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி உணவகத்தில் கொள்ளையிட்டவர் சிறையிலிருந்து தப்பிச் சென்றவர் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொள்ளையர் பிறிதொரு திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்டு கண்டி குண்டகசாலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதியிலிருந்து தப்பி வந்தே சாவகச்சேரியில் கொள்ளையில் ஈடுபட்டார் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (இ-89)

## பெண்களை கீறிவிட்டு தப்பிச் சென்ற குள்ள மனிதனால் அச்சம்!



(கொழும்பு)

இலங்கையில் பல பிரதேசங்களில் 2 அடி வரை உயரம் கொண்ட மனிதர்கள் போன்ற தோற்றம் கொண்ட உயிரினம் தொடர்பில் பெரும் பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது.

இதற்கமைய நேற்று முன்தினம் மறைந்திருந்த குள்ள மனிதன் தம்மைக் கீறிவிட்டு தப்பிச்சென்றதாக அநுராதபுர - மஹவிலச்சிய பிரதேச பெண்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அம்பாறை பிரதேசத்தில் விவசாயிகள் சிலரும் குள்ள மனிதனைக் கண்டதாகத் தெரிவித்தனர்.

அம்பாறை - தமன - நொட்டம பிரதேச விவசாயிகள் குள்ள மனிதன் நடமாட்டம்இருப்பதாக அண்மையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## கொழும்பில் மூன்று இளைஞர்களைக் கடத்தி கொலை செய்த கடற்படைச் சிப்பாய் கைது

(கொழும்பு)

கொழும்பில் 11 இளைஞர்களை கடத்தி அவர்களில் மூவரை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தைச் சேர்ந்த குறித்த சிப்பாய் 2008-2009 இல் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை பொலிஸ் பேச்சாளர் உறுதி செய்துள்ளார்.

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் 2018 ஒகஸ்டில் நேவி சம்பத் என்பவர் கைது செய்யப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தொடர்ச்சியாகவே மற்றொரு கடற்படை சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு உதவினார் என இலங்கையின் முப்படைகளின் பிரதானி மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடக்கு-கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் மங்களவுடன் கூட்டமைப்பினர் சந்திப்பு



(கொழும்பு)

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. (இ-7)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க இணக்கம்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு ஜனாதிபதி. பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்மட்ட உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அத்தோடு இந்த விடயம் தொடர்பான கருத்துக்களை கூறுமாறு அவர் தெரிவித்திருந்ததோடு, அதற்கு சிலர் ஆதரவளித்திருந்தனர்.

அதேபோல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவதற்கு ஆதரவு வழங்க இணங்கியுள்ளார்.

அவ்வாறே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி ஒழிக்கப்படுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இதற்கமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு பெரும்பாலும் அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## வர்த்தகர்கள் காணாமல்போன சம்பவம்; உப பொலிஸ் பரிசோதகர் நேற்றுக்கைது

(காலி)

காலி - ரத்கமயில் வர்த்தகர்கள் இருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பாக, தென் மாகாண விசேட விசாரணைப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

ரத்கம- உதாகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ரசேன் சிந்தக மற்றும் 33 வயதுடைய மஞ்சுள அசேல ஆகியோர் கடந்த மாதம் 23 ஆம் திகதி வான் ஒன்றில் வந்த குழுவினரால் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



விக்கெட்டை மூன்றை
வேட்டையாடிய பின்னர் ராஜித

# 'விரிச்சாச்சு வலை'

## போர்ட் எலிசபெத்தில் தென்னாபிரிக்காவுக்கு

தென்னாபிரிக்காவுக்கு எதிராக போர்ட் எலிசபெத்தில் நடைபெறும் 2வது டெஸ்டில் இலங்கை அணியின் வெற்றிக்கு 197 ஓட்டங்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகள் மோதும் 2வது டெஸ்ட் போர்ட் எலிசபெத் நகரில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா 222 ஓட்டங்கள் எடுத்தது.

முதல் நாள் முடிவில், முதல் இன்னிங்சில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களை எடுத்திருந்தது. திரிமான்னே (25) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் ரபாடா 'வேகத்தில்' ராஜித (1), குசல் பெரேரா (20) ஆட்டமிழந்தனர். திரிமன்னே (29) சோபிக்கவில்லை. நிரோஷன் டிக்வெல (42) ஆறுதல் கொடுத்தார். முதல் இன்னிங்சில் இலங்கை அணி 154 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா அணி சார்பில் ரபாடா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின், 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு மார்க்ரம் (18), டீன் எல்கர் (2), பாவுமா (6) ஏமாற்றினர். அம்லா (32) நிலைக்கவில்லை. சுரங்க லக்மல் பந்தில் குயின்ரன் டி கொக் (1), கேஷவ் மகராஜ் (6), ரபாடா (0) ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் டு பிளசி அரைச்சதமடித்தார்.

இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 128 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. டுபிளசி (50) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் லக்மல் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**சுலப இலக்கு**

பின் 197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் 2வது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணிக்கு அணித் தலைவர் திமுத் கருணாரத்ன (19), திரிமான்னே (10) ஏமாற்றினர்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஒஷாடா பெர்னாண்டோ (17), குசல் மெண்டிஸ் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

எட்டு விக்கெட் கைவசம் உள்ள நிலையில், இன்னும் 137 ஓட்டங்கள்மட்டுமே தேவைப்படுவதால் இலங்கை அணி வெற்றி பெற அதிக வாய்ப்பு உள்ளது.

# விசாகப்பட்டினம் யார் 'வசம்'

## இந்தியா - ஆஸி., நாளை மோதல்



ஹோலி

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் முதல் 'ரி20' போட்டி நாளை விசாகப்பட்டனத்தில் நடைபெறுகிறது.

இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி இரண்டு 'ரி20', ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகள் முதலில் 'ரி20' தொடரில் மோதுகின்றன. சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் நடந்த மோதலில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற தொடர் 1-1 என சமன் ஆனது.

இம்முறை சொந்தமண் பலத்தில் இந்திய அணி களமிறங்குகிறது. நியூசிலாந்து தொடரில் கடைசி 2 ஒருநாள், 3 'ரி20' போட்டியில் ஓய்வெடுத்த இந்திய அணித் தலைவர் ஹோலி அணிக்கு திரும்பியுள்ளது கூடுதல் பலம். இதேபோல பந்துவீச்சில் 'யோர்க்கர்' பும்ரா மீண்டும் களம் காணுகிறார்.

ஆரம்ப வீரர் ஷிகர் தவானுக்கு சில போட்டிகளில் ஓய்வு தரப்பட்டு லோகேஷ் ராகுல் களமிறக்கப்படலாம் எனத் தெரிகிறது. ஒருநாள் அணியில் புறக்கணிக்கப்பட்ட தமிழகத்தின் தினேஷ் கார்த்திக், திறமை காட்டும் பட்சத்தில் உலக கிண்ணத் தொடரில் இடம் பெற முயற்சிக்கலாம். ஹர்திக் பாண்ட்யா விலகிய நிலையில் கேதர் ஜாதவ், விஜய் ஷங்கர் 5ஆவது பந்துவீச்சாளர் வாய்ப்பு பெற காத்திருக்கின்றனர்.

**முக்கிய தொடர்**

அடுத்து மார்ச் 2 முதல் ஒருநாள் தொடர் ஆரம்பமாகிறது. உலக கிண்ணத் தொடருக்கு முன் இந்திய அணி பங்கேற்கும் கடைசி சர்வதேச தொடர் என்பதால் இந்திய வீரர்கள் மீது பெரும் எதிர்பார்ப்பு காணப்படுகிறது. ஆரம்ப வீரர் ரோகித் சர்மாவின் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான சராசரி ஓட்டக் குவிப்பு 65.85 ஆக உள்ளது சாதகம்.

'நடுத்தர வரிசையில்' தினேஷ் கார்த்திக் இடத்தை தட்டிச் சென்ற ரிஷாப் பன்ட், பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். 'சீனியர்' விக்கெட் காப்பாளர் தோனி, அனுபவ 'அட்வைஸ்' இளம் வீரர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். அணியில் புதியதாக இணைந்த 'சகலதுறை வீரர்' ஜடேஜாவுக்கு களமிறங்கும் அணியில் இடம் கிடைப்பது சந்தேகமே.

பந்துவீச்சில் மொஹமட் ஷமி, புவனேஷ்வர் மற்றும் பும்ரா என இந்தியாவுக்கு பலம் சேர்க்க மிரட்டல் கூட்டணி காத்திருக்கிறது. இவர்களுடன் சகால், குல்தீப் என 'சுழல்' இரட்டையரும் நம்பிக்கை கொடுக்கலாம்.

**சவாலுக்கு 'ரெடி'**

அவுஸ்திரேலிய அணியை பொறுத்தவரையில் கடந்த 2017 முதல் பங்கேற்ற 31 ஒருநாள் போட்டிகளில் 8ல் தான் வென்றது. கடைசியாக பங்கேற்ற 6 ஒருநாள் தொடர்களிலும் தோற்றுள்ளது. தடைகாரணமாக 'சீனியர்' ஸ்ரீவ் ஸ்மித், வோர்னருக்கு இம்முறையும் இடம் இல்லை.

இந்திய அணிக்கு எதிராக கடந்த தொடரில் களமிறங்கிய அணித் தலைவர் பின்ச் உள்ளிட்ட பெரும்பாலான வீரர்கள் இந்தியா வந்துள்ளனர். அலெக்ஸ் கரேயுடன் துணைத் தலைவராக செயற்பட உள்ள கம்மின்ஸ், ஒருநாள் அணியில் இணைந்தது, ஷோன் மார்ஷ், கவாஜா இருப்பது பலம் சேர்க்கிறது. மக்ஸ்வெல் 'போர்மிற்கு' திரும்பினால் இந்தியாவுக்கு சவால் கொடுக்கலாம்.

**11**

இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் இதுவரை 19 'ரி20' போட்டிகளில் மோதின. இதில் இந்தியா 11ல் வென்று ஆதிக்கம் செலுத்துகிறது. 6ல் அவுஸ்திரேலியா வென்றது. 2 போட்டிக்கு முடிவில்லை.

◈ சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 6 போட்டிகளில் 4ல் வென்ற இந்தியா 1 போட்டியில் தோற்றது. ஒரு போட்டி ரத்தானது.

**47**

இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் 131 ஒருநாள் போட்டிகளில் மோதின. இந்தியா 47ல் வென்றது. அவுஸ்திரேலியா 74ல் வெற்றி பெற்றது. 10 போட்டிகளுக்க முடிவில்லை.

# பாகிஸ்தானுடனான உறவு வேண்டாம்'

## கங்குலி திட்டவட்டம்



கங்குலி

"உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் நமது வீரர்கள் பங்கேற்கக்கூடாது. ஹொக்கி, கால்பந்து என எந்த விளையாட்டிலும் இவர்களுடன் விளையாடக்கூடாது. எல்லா உறவையும் ரத்து செய்ய வேண்டும்," என இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

புல்வாமா தாக்குதல் பாகிஸ்தான் மீதான கோபத்தை இந்திய மக்களிடம் அதிகரித்து உள்ளது. பாகிஸ்தான் பொருட்களுக்கான சுங்க வரி அதிகரிப்பு உள்ளிட்ட நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கி உள்ளது.

தற்போது, இதன் தாக்கம் கிரிக்கெட்டிலும் எதிரொலிக்கிறது. இங்கிலாந்து மண்ணில் வரும் ஜூன் 16ல் (மன்செஸ்டர்) நடக்கவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் இந்திய அணி பங்கேற்க எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

**சரியான பதிலடி**

இது குறித்து இந்திய அணி முன்னாள் அணித் தலைவர் கங்குலி கூறியதாவது, இங்கிலாந்தில் வரும் மே இறுதியில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. இதில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கவுள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் ஒரு போட்டியில் மோதும். பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு லீக் போட்டியை புறக்கணிப்பதால், பெரிய பிரச்சினையாக மாற வாய்ப்பில்லை. ஆனால், இந்திய அணி இல்லாமல் உலக கிண்ண தொடரை சர்வதேச் கிரிக்கெட் கவுன்சிலால் நடத்த முடியாது. அதே நேரத்தில், பாகிஸ்தானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஐ.சி.சி.,க்கு அழுத்தம் கொடுக்கும் வலிமை இந்தியாவுக்கு உள்ளது என்றார்.


**மணல் ஏல விற்பனை**

முல்லைத்தீவு மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 2019.02.28ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இ பதிவாளர்

# போர்க்குற்றவாளிகள் என்று யார் கூறினாலும் இராணுவத்தினரைத் தண்டிக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின்போது இராணுவ வீரர்கள் போர்க் குற்றத்தில் ஈடுபடவில்லை. ஆகையால் அவர்களைத் தண்டிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

யுத்தக்குற்றத்தில் ஈடுபட்ட இராணுவ வீரர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றமை குறித்து ஜனாதிபதியிடம் கொழும்பிலுள்ள ஊடகமொன்று கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இராணுவத்தினர் குருதி சிந்தி நாட்டை மீட்டெடுத்தவர்கள். ஆகையால் அவர்கள் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதே எனது நிலைப்பாடு.

இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று யார் கூறினாலும் அவர்களை தண்டிக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். சிலர் இராணுவத்தினர் மீது வீண்பழி சுமத்தி அவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த முயற்சிக்கின்றனர். அவர்களுக்கு வரலாறு பாடம் புகட்டும்.



நான் ஆட்சியிலிருக்கும் வரை இராணுவத்தை நிச்சயம் பாதுகாப்பேன்" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

# குற்றவாளிகளைப் பாதுகாக்கவா மனித உரிமை ஆணைக்குழு?

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக்குழு மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றவாளிகளைப் பாதுகாக்கப் போகிறதா? அல்லது பொது மக்களைப் பாதுகாக்கப் போகிறதா? என்று நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார் அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் சிறப்பு அதிரடிப்ப டையை நிறுத்துவதற்கு, இலங்கை மனித உரிமை கள் ஆணைக் குழு எதிர்ப்புத் தெரிவித்திருந் தது.

இது தொடர்பாகவும், ஐ.நா. அமைதிப்படைக்கு அனுப்பப்படும் இலங்கை படையினரை ஆய்வுக்குட்படுத்தும் விவகாரம் தொடர்பாகவும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீது. மைத்திரிபால சிறிசேன இரண்டு வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார். நேற்று முன்தினம் மீண்டும் நாடாளுமன்றத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீதுஅவர் விமர்சனங் களை முன் வைத்துள் ளார். (இ-7)

# சம்பா, நாட்டரிசிக்கான உச்ச சில்லறை விலை அறிவிப்பு

(கொழும்பு)

சம்பா மற்றும் நாட்டரிசிக்கான அதியுச்ச சில்லறை விலை ஏப்ரல் முதலாம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படுமென விவசாய, கிராமிய பொருளாதாரம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் பி. ஹரிசன் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

நெற் செய்கையாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஒரு கிலோ சம்பா அரிசிக்கு 85 ரூபாவையும், நாட்டரிசிக்கு 80 ரூபாவையும் அதியுச்ச சில்லறை விலையாக அறிவிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஏப்ரல் முதலாம் திகதி வெளியிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

27/2 நிலையியற் கட்டளையின் கீழ் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் ஹறிசன் மேற்கண்டவாறு பதில் வழங்கினார்.



விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு உத்தரவிட்டுள்ளோம்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கு நாடு முழுவதிலுமுள்ள 136 களஞ்சியங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமான 207 களஞ்சியங்களில் 136 களஞ்சியங்கள் ஏற்கனவே திறக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஒரு கிலோ நாட்டரிசி நெல் 38 ரூபாவுக்கும், சம்பா நெல் 41 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும். இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தை அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தொழில்நுட்ப மாற்றீட்டுப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சால் யாழ்ப்பாண பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் LED Light Bulb தயாரித்தல், Sensor Security System, திரவச்சவர்க்காரம் தயாரித்தல் ஆகிய பயிற்சி நெறிகள் இலவசமாக நடைபெறவுள்ளன.

ஆர்வமுள்ளோர் தமது சுய விபரக்கோவையுடன் 01.03.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக விதாதா வள நிலையம், யாழ்ப்பாணம். (பழைய பிரதேச செயலக வளாகம்) (சென்ஜோண்ஸ் கல்லூரிக்கு முன்பாக) தொலைபேசி இலக்கம் 021 222 4093 பதிவை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மகள் கொலை! தாய் படுகாயம்

(நொச்சியாகம)

நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகிபுர பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், மற்றொரு பெண் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இந்தத் தாக்குதல் நடந்துள்ளதுடன், தாக்குதலில் படுகாயமடைந்த இரண்டு பெண்கள் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்படும் போது 21 வயதுடைய யுவதி உயிரிழந்துள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் காயமடைந்த பெண்ணின் இரண்டாவது கணவர் என்பதுடன், உயிரிழந்த யுவதி காயமடைந்த பெண்ணின் முதலாவது கணவனுக்கு பிறந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
11
1947



மறைவு
12
03
2012

அமரர் தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்

(எழுத்தாளர், ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், கல்வித்திணைக்களம்)

அன்பின் இருப்பிடமாய்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
இலக்கியத்தை போதித்த ஆசானாய்
இருந்து எமை வளர்த்த அப்பாவே
நீங்கள் மறைந்து ஏழு ஆண்டு
ஆகிவிட்ட போதும் உங்கள் அறிவுரைகள்
காதினிலே கேட்கிறது..

கொத்தன்தறை, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.

-குடும்பத்தினர்-

(7626)


# இராசி பலன்

**மீனம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மேடம்:** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாமுண்டு, பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப காரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், பண விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்:** போசன சுகமுண்டு, செயற்பாடுகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், ரோக பயமுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

இராசி பலன் — கிரகநிலை

செவ் | ராகு | சூரி, புத | சனி, கேது, சுக் | குரு | சந்

சந்திராஷ்டமம்
உத்திரட்டாதி
மாலை 4-27 மணிக்கு
துலாம்-சந்

23.02.2019

மாசி 11, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சதுர்த்தி பிற்பகல் 1.54 மணிவரை

சித்திரை பின்னிரவு 4.29 மணிவரை

சுபநேரம் 3.30-5.00 மணிவரை

இராகுகாலம் 9.30-11.00 மணிவரை

வளவன்

**தனுசு:** மற்றவர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**கன்னி:** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன நிர்வாகத் தெரிவும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். கடந்த ஆண்டு சிறப்பாகச் செயற்பட்ட இளைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (படங்கள்:-கிஷோர்)

# பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

ஊடகப்பணியின் போது வடகிழக்கு தமிழர் தாயகத்தில் படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களின் குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணமொன்றை வழங்க ஜனாதிபதி செயலகம் மற்றும் ஊடக அமைச்சு முன்வந்துள்ளது.

அண்மையில் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடக அமைப்புப் பிரதிநிதிகளுடன் ஊடக அமைச்சின் செயலாளர் மட்டத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் போது படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி வழங்கும் விசாரணையிலோ அல்லது அதற்கான பொறிமுறையிலோ குறுக்கிடாத வகையில் குறித்த இடைக்கால நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.


அதற்கான விண்ணப்பங்களை குடும்பங்களிடமிருந்து பெற்று பரிந்துரைகளை யாழ்.ஊடக அமையம் சமர்ப்பிக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்.ஊடக அமையம் பரிந்துரைகளுக்கான உயர்மட்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

இணைக்கப்பட்டுள்ள பெயர் விபரங்களை உடைய கொல்லப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் அல்லது ஊடகப்பணியாளர்களின் குடும்பங்கள் உடனடியாக யாழ்.ஊடக அமையத்துடன் (இல:84ஏ, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்) நேரடியாகவோ அல்லது 021 320 2622 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கண்ணமுத்து அரசகுமார் ஊடகப்பணியாளர், டீ.செல்வரட்ணம் ஊடகப்பணியாளர், யோககுமார் கிருஸ்ணபிள்ளை ஊடகப்பணியாளர், கே.நவரட்ணம் ஊடகப்பணியாளர், சுப்ரமணியம் சுகிர்தராஜன் ஊடகவியலாளர், எஸ்.ரி.கணநாதன் ஊடக நிறுவன முகாமையாளர், பஸ்ரின் ஜோர்ஜ் சகாயதாஸ் ஊடகப்பணியாளர், ராஜரட்ணம் ரஞ்சித்குமார் ஊடகப்பணியாளர், மரியதாசன் மனோஜன்ராஜ் ஊடகப்பணியாளர், சதாசிவம் பாஸ்கரன் ஊடகப்பணியாளர், எஸ்.ரவீந்திரன் ஊடகப்பணியாளர், சந்திரபோஸ் சுதாகர் ஊடகப்பணியாளர் (வவுனியா), சங்கரசிவம் சிவதர்சன் (வன்னி) ஊடகவியலாளர், அந்தோனிப்பிள்ளை செரின் சித்தராஞ்சன் ஊடகப்பணியாளர், வடிவேல் நிமலராஜ் ஊடகப்பணியாளர், இசைவிழி செம்பியன் (சுபாஜினி) ஊடகவியலாளர் (வன்னி), சுரேஸ் லிம்பியோ ஊடகப்பணியாளர் (வன்னி), ரி.தர்மலிங்கம் ஊடகப்பணியாளர், பரநிருபசிங்கம் தேவகுமார் ஊடகவியலாளர், புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி ஊடகவியலாளர், சசிமதன் ஊடகப்பணியாளர் (வன்னி), இராசையா ஜெயந்திரன் ஊடகவியலாளர்(வன்னி), மகாலிங்கம் மகேஸ்வரன் (வன்னி) ஊடகப்பணியாளர், மரியநாயகம் அன்ரன் பௌஷ்ற்(வன்னி) ஊடகப்பணியாளர், நல்லையா மகேஸ்வரன் (வன்னி) ஊடகப்பணியாளர், மேரி டெஸ்சி (வன்னி) ஊடகப்பணியாளர், ஜெயராசா சுசிபரன் (வன்னி) ஊடகவியலாளர், மேரி அருளப்பன் அன்ரனிகுமார் (வன்னி) ஊடகப்பணியாளர் என யாழ்.ஊடக அமையத்தின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# காரைநகரில் டெங்கு ஒழிப்பு





(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே-42 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று வெள்ளிக்கிழமை டெங்கு நோய் ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், குடும்பநல சுகாதார மாதுக்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக, டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னிட்டு காலை காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாசாலையில் சிரமதானம் இடம்பெற்றது. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிரதேச மக்களும் இணைந்து பாடசாலை வளாகத்தை சுத்தம் செய்தனர்.

தொடர்ந்து வீட்டுத் தரிசிப்பு இடம்பெற்றது. பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், குடும்பநல சுகாதார மாதுக்கள் போன்றோர் பல அணிகளாகப் பிரிந்து வீடுகளுக்கு நேரடியாகச் சென்று டெங்கு தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டினர்.

இதன்போது, பற்றைக் காணிகள், ஆட்களற்ற நிலையில் பற்றைகள் வளர்ந்துள்ள வீட்டுக் காணிகள் போன்றவற்றுக்கு சிவப்பு எச்சரிக்கை அறிக்கை ஒட்டப்பட்டது. ஏழு நாட்களுக்குள் அவற்றைச் சுத்தம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள் மற்றும் மயிர்க்கொட்டிகளின் தாக்கம் அதிகரிக்கும் என அடையாளம் காணப்பட்ட காணிகளையும் உடனடியாக துப்புரவு செய்யுமாறு காணி உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ-9)

# சிவராத்திரியை முன்னிட்டு பாத யாத்திரை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரிப் பெருவிழாவினை முன்னிட்டு அகில இலங்கையிலுமிருந்தும் சிவனடியார்கள் கலந்து கொள்ளும் பாதயாத்திரை குழுத்தலைவர் வேல் சுவாமி ஐயா தலைமையில் இன்று 23 ஆம் திகதி காலை செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்து அங்கிருந்து 24 ஆம் திகதி முற்பகல் 8.30 மணியளவில் ஆரம்பமாகி, முறையே செம்மணி, நாவற்குழி, தனங்கிளப்பு, கேரதீவு, பூநகரி கரிக்கோட்டு குளம் கந்தசுவாமி, பல்லவராயன் கட்டு, முழங்காவில் அரசகுளம் சிவன்கோயில், வெள்ளாங்குளம், மூன்றாம்பிட்டி, இலுப்பைக்கடவை, ஆத்திமோட்டை, புதுக்குளம், கள்ளியடி, பள்ளமடு, பாப்பாமோட்டை, மாணிக்கத்திடல் அடம்பன் ஊடாக 04.03.2019 அன்று திருக்கேதீஸ்வரத்தை சென்றடையவுள்ளது. (இ

# உணவகத்தில் திருடிய பணத்தில் வாங்கிய பொருட்கள் மீட்பு


(சாவகச்சேரி)

சாவகச்சேரி உணவகத்தில் கொள்ளையடித்த பணத்தில் கொள்ளையர்கள் வாங்கிய ஒரு தொகுதி பொருட்களை சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டுள்ளனர். கடந்த மாதம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகிலுள்ள உணவகத்தில் ஏழு இலட்சம் பணமும் மூன்று இலட்சம் பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளும் கொள்ளையிடப்பட்டன.

இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட சகோதரர்கள் இருவரை சாவகச்சேரி பொலிஸார் அண்மையில் கைது செய்திருந்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் கொள்ளையிடும் போது அணிந்திருந்த உடை மற்றும் சுமார் மூன்று இலட்சம் பெறுமதியான வீட்டு தளபாடங்கள் உட்பட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவத்தில் கைது நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளைச் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினர் மேற்கொண்டிருந்தனர். (5-30-89)

# வீதி புனரமைப்பு




(இளவாலை)

அராலி மேற்கில் நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்த வீதி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீடு மூலம் பிரதேச சபை உறுப்பினர் க.இலங்கேஸ்வரன் ஊடாக அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டது. (இ-104)

# மின் விளக்கு பொருத்த நிதியொதுக்கீடு!

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 17 வட்டாரங்களுக்கும் சம அளவு தெரு மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

மின் விளக்குகளைப் பொருத்தும் பணி கடந்த புதன்கிழமை மட்டுவில் பிரதேசத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டதாகவும் தொடர்ந்து ஒவ்வொரு வட்டாரப் பிரிவிலும் தெரு மின் விளக்குகள் பொருத்தப்படும் எனவும் தெரிவித்தார். (இ-103)




# புதிய மின்குமிழ்களை பொருத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கைதடி மத்தி குமரநகர் வீதியின் மின் விளக்குகள் ஒளிராமல் காணப்படுவதால் இரவு வேளையில் வீதியால் செல்லும் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட குறித்த வீதியின் மின் விளக்குகள் கடந்த ஒரு மாதகாலமாக வயர்கள் அறுந்த நிலையில் ஒளிராமல் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். (5-10-111)

# சின்னம் சூட்டல்

யாழ்.கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நாளை மறுதினம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ் கலந்து கொள்வார். (இ-5)

## பேராசிரியர் கலாநிதி கா.குகபாலன் அவர்களின் இலங்கைத் தமிழர் புலம்பெயர்வு கனடாவில் அவர்கள் வாழ்வியல்

# நூல் வெளியீடு

**காலம்: 2019.02.24 ஞாயிறு காலை 9.30 மணி**
**இடம்:- சபாலிங்கம் கலையரங்கம்,யாழ்.இந்துக்கல்லூரி**

தலைவர்
**பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை** அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்
**கௌரவ மாவை. சோ.சேனாதிராசா** அவர்கள்
(தலைவர், தமிழரசுக்கட்சி, பாராளுமன்ற உறுப்பினர்)

ஆசியுரை
**கலாநிதி ஆறு.திருமுருகன்** அவர்கள்
(தலைவர்- துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)

வாழ்த்துரைகள்
**உயர்திரு. இ.இளங்கோவன்** அவர்கள்
(ஆளுநரின் செயலாளர்- வடக்கு மாகாணம்)
**கலாநிதி க.சுதாகர்** அவர்கள்
(பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
**உயர்திரு. சதா.நிமலன்** அவர்கள்
(அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி)

வெளியீட்டுரை
**பேராசிரியர், கலாநிதி என்.சண்முகலிங்கன்** அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

ஆய்வுரை
**உயர்திரு. ந.விஜயசுந்தரம்** அவர்கள்
(அதிபர், பிரதம ஆசிரியர்- வலம்புரி நாளிதழ்)

முதற்பிரதி பெறுபவர்
**உயர்திரு. ஈ.எஸ்.பி.நாகரத்தினம்** அவர்கள்
(பிரபல வர்த்தகர்)

*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**நூல்வெளியீட்டுக்குழுவினர்.** (இ)

## போதைப்பொருளுக்கு எதிராக நாவற்குழியில் ஆர்ப்பாட்டப் பேரணி





(கொடிகாமம்)

நாவற்குழி கிழக்கு கிராம சக்தி மக்கள் சங்கத்தின் கிராம சக்தி வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வாக போதைப் பொருளுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி நாவற்குழி மகா வித்தியாலயத்தின் முன்றலில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆரம்பித்து முற்பகல் 10 மணியளவில் நாவற்குழி சந்தியில் நிறைவு பெற்றது.

இதில் நாவற்குழி கிழக்கு கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தங்க வேலு, கிராம சக்தி மக்கள் சங்கத்தின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள், கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நாவற்குழி சந்தியில் இப் பேரணியில் பங்கு பற்றிய பொது மக்கள் முன்னிலையில் போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு சம்பந்தமான கருத்துக்கள் வழங்கப்பட்டன. (இ-10)

## உழவியந்திர ஏல விற்பனைக்கான கேள்விக் கோரிக்கை

NPRE 0998 இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள மகேந்திரா உழவியந்திரம் விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர் வாரத்தின் ஏழு நாட்களும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் கீழ்க்காணும் முகவரியில் பார்வையிட முடியும் என்பதோடு கேள்வி கோர விரும்புவோர் தங்களது கேள்விக் கோரிக்கையினை மூடு தபாலில் இட்டு இடது பக்க மேல் மூலையில் "**மகேந்திரா உழவியந்திரத்திற்கான கேள்வி கோரல்**" எனத் தவறாது குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 05.03.2019 அல்லது அதற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடிய வகையில் எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
**பொன். நித்தியானந்தம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொடர்புகளுக்கு: - 077 015 2513, 021 492 3118**

(இ-5590)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(ூ-7590)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**றெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


## 2019 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசால்யிலுள்ள சிற்றுண்டிச்சாலையை 01.04.2019 தொடக்கம் 31.03.2020 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

24.02.2019 ஆம் திகதி முதல் 04.03.2019 வரை வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை பின்வரும் கொடுப்பனவைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்புச் செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை | 1000.00 | 20000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 14.03.2019 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சலில் திரு.கி.சின்னராசா, தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்" என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் 18.03.2019 (திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமுகமளித்தல் வேண்டும். தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

**திரு.கி.சின்னராசா,**
**தலைவர்,**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.** (c/5577)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:ரேவதி 1
கி.பா:71 செவ் 7 இல்
உயரம்: 169cm
தகைமை/தொழில்:வங்கிSwiss
எதிர்பார்ப்பு:பட்டதாரி(Artsதவிர்ந்த) உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9359

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:பூராடம் 1
கி.பா: 37செவ் 8 இல்
உயரம்:5'6''
தகைமை/தொழில்:QS,HNDE Quanity Surveyor
எதிர்பார்ப்பு: A/L
தொ.இ: B/9361

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 4
உயரம்: 5'11''
தகைமை/தொழில்:B.Sc , Charted Accountant, Finance Manager,UK
எதிர்பார்ப்பு: Professional Job,UK
தொ.இ: B/9362

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம் செவ் 2 இல்
உயரம்: 180cm
தகைமை/தொழில்:O/L,தனியார் தொழில்
தொ.இ: B/9364

### இவர்களுக்கு மணமகன் தேவை


பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:ரோகிணி 3
கி.பா: 60 செவ் 12 இல்
உயரம்:5'4''
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்து விரும்பத்தக்கது
தொ.இ: G/2400

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 11 3/4 செவ் 2 இல்
உயரம்: 5'3''
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: அரச,தனியார் சுய தொழில்
தொ.இ: G/2412

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 10
உயரம்: 150cm
தகைமை/தொழில்:O/L, சமூக சுகாதார பணியாளர்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்
தொ.இ: G/2432

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 13 உயரம்: 5'6''
தகைமை/தொழில்:BA, HNDM
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/2445

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக க.குமணன் (MBA London) கலந்து கொண்டார்.

# தேசிய தொலைக்காட்சியின் முறைகேடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம்

## அநுரகுமார எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய தொலைக்காட்சியில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதென்றும், அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

நேற்று நாடாளுமன்ற அமர்வில் அவர் இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

சாதாரண மக்களின் கல்வி, பொழுதுபோக்கு ஆகியவற்றில் அரும்பங்காற்றிய தேசிய தொலைக்காட்சி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு ஏற்பட்டுள்ளதால் அங்குள்ளவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்



என அநுரகுமார சுட்டிக் காட்டினார்.


தரப்படுத்தலில் முன்னிலையில் இருந்த தேசிய தொலைக்காட்சி இன்று துரதிர்ஷ்டவசமாக பின்னடைவை சந்தித்துள்ளதென்றும், அங்குள்ள ஊழியர்கள் சம்பளப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அநுரகுமார மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக வெளிநபர்களின் தலையீடு, சிலருக்கு இலட்சக்கணக்கில் சம்பளம் வழங்கப்பட்டமை என பல மோசடிகள் இடம்பெற்றுள்ளதென குறிப்பிட்ட அவர், பணிப்பாளர் சபை குறித்து பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதெனவும் எனவே, இவற்றை உரிய முறையில் விசாரித்து மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவது அவசியம் எனவும் அநுரகுமார வலியுறுத்தினார். (இ-7)

# கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்புக்குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு புதுமுறிப்பு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் குளத்தின் கீழ் பயன்பெறும் விவசாய அமைப்புக்கள் அனைத்து விவசாயிகளையும் தவறாது பங்குபற்றுமாறு மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9-254)

# கிராம சக்தி வேலைத்திட்டத்தின் கீழ் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க நடவடிக்கை



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வரும் கிராம சக்தி வேலைத்திட்ட வாரத்தின் ஐந்தாம் நாளான நேற்று சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல் தொடர்பான விழிப்புணர்வு இடம்பெற்றது.


2025 ஆம் ஆண்டு வறுமையற்ற இலங்கையை உருவாக்குவோம் என்னும் தொனிப்பொருளில் கடந்த 18 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை கிராம சக்தி வேலைத்திட்ட வாரம் நாடு பூராகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தின் 12 கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம சக்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், வவுனியா, தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் இந் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது கிராம மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள கிராம சக்தி வங்கியில் சேமிப்பை ஏற்படுத்தி கிராமத்தின் அபிவிருத்திக்கும், குடும்ப பொருளாதார வளர்ச்சிக்கும் ஒவ்வொருவரும் பணியாற்ற முடியும் என்பது தொடர்பான தெளிவுபடுத்தல்கள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9-250)

# தாய்மொழி நாள் விழா



கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்திய உலகத் தாய்மொழி நாள் விழா நேற்று முன்தினம் கிளி/தர்மபுரம் மத்திய கல் லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

தமிழ்ச்சங்கத்தின் தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, கிளிநொச்சி மாவட்ட துணைத் திட்டமிடல் பணிப்பாளர் ந.கௌரிதாசன், கண்டாவளை உதவிப்பிரதேச செயலர் ம.பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (9-84

## பகிடிவதை அதிகரிப்பு

# பல்கலை.முகாமைத்துவ பீடம் காலவரையறையின்றி மூடல்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்குள் அதிகரித்து வரும் பகிடிவதையின் காரணமாகவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வவுனியாவில் நடைபாதை வியாபாரத்தால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்

வவுனியா - இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதிகளில் நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்வதால் கழிவுகள் கால்வாய்களை அடைத்து நீர் தேங்குவதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதால் இலுப்பையடி பேருந்து தரிப்பிடத்தில்வாகன நெரிசல் ஏற்படுவதுடன் அதிகளவில் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் பொது மக்கள் தெரிவிக்கையில்,

இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதிகளிலுள்ள கால்வாய்கள், நடைபாதையின் இருபகுதி ஓரங்களில் சிலர் கால்வாயில் வியாபாரம் மேற்கொண்டு வருகின்றனர். தமது கழிவு குப்பைகளை அப்பகுதியில் வீசி வருகின்றனர். இதனால் கால்வாயினால் செல்லும் கழிவு நீர் அடைப்பு ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து டெங்கு நுளம்புகள் பெருகுவதுடன் மாலை நேரங்களில் அப்பகுதியில் நுளம்பு தொல்லைகள் அதிகரித்து காணப்படுகின்றன. சுகாதாரமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைபாதை வியாபாரத்தினை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் இலுப்பையடி பேருந்து தரிப்பிடத்தில் நடைபாதை வியாபாரம்மேற்கொள்வதால் வாகன நெரிசல் ஏற்பட்டு விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

நடைபாதையில் வியாபார நடவடிக்கையினை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலக்கடலைச் செய்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்க கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலக்கடலைச் செய்கையாளர்களுக்கு எந்த விதமான இழப்பீடுகளும் வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என நிலக்கடலைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் அதிகளவு நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளும் மாவட்டமாக காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை 2816 ஹெக்டெயர் நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 1583 ஹெக்டெயர் நிலக்கடலைச் செய்கை பகுதியளவிலும் முழுமையாகவும் அழிவடைந்துள்ளது.

இவ்வாறு அழிவடைந்த செய்கைகளுக்கான நட்டஈடுகளோ அல்லது அடுத்த செய்கைகளுக்கான விதை நிலக்கடலைகளையோ வழங்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளன்ர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வருடத்தில் மூன்று போகம்நிலக்கடலைச்செய்கை மேற்கொள்ளப்படும் ஒரு மாவட்டமாகக் காணப்பட்டாலும் இவ்வாறு பாதிக்கப்பட்ட தங்களுக்கு நட்டஈடுகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# சிந்துரல கப்பலின் புதிய கட்டளை அதிகாரியாக கப்டன் நலீன் நவரத்ன

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் உயர் தொழில்நுட்ப ஆழ்கடல் கண்காணிப்பு கப்பலான சிந்துரல கப்பலின் புதிய கட்டளை அதிகாரியாக கப்டன் நலீன் நவரத்ன நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கப்பலின் முன்னாள் கட்டளை அதிகாரியான கப்டன் உதய குமாரசிங்கவால் கொழும்பு துறைமுகப் பகுதியில் வைத்து புதிய கட்டளை அதிகாரிக்கு கடற்படை பாரம்பரிய முறைப்படி கடமைகள் ஒப்படைக்கப்பட்டன. (இ-7)

# அரசியலமைப்புப் பேரவையின் அமைப்பை மீள் பரிசீலிக்கவும்

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டு மே மாதத்தில் அமுலுக்கு வந்த 19 ஆவது அரசியல் யாப்புத் திருத்தமே தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இத் திருத்தத்தின் பிரகாரம் "நாடாளுமன்ற சபை" என்பது "அரசியலமைப்புப் பேரவை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

19 ஆவது திருத்தத்தின்படி, 9 ஆணைக் குழுக்களின் உறுப்பினர்களின் பெயர்களை விதந்துரைக்கும் கடமை அரசியலமைப்புப் பேரவைக்கே இருக்கும். அத்துடன் பிரதம நீதியரசர் உட்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர்களையும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் உட்பட்ட நீதியரசர்கள், நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் என்பதுடன், சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், ஓம்பூட்ஸ்மன், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகிய 5 பதவிகளுக்கான பெயர்களை ஜனாதிபதி நியமனம் செய்வதற்கு முன்னதாக யாப்பு பேரவை அங்கீகாரம் வழங்குவது அவசியம். இந்த 19 ஆவது திருத்தத்தில் புதிதாக இரண்டு விடயங்கள் உள்ளன.

அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையை அல்லது அங்கீகாரம் பெற்ற ஒரு நபரை 14 நாட்களுள் ஜனாதிபதி நியமனம் செய்யாமல் இருப்பாராயின், அந்த நபர் நியமனம் பெற்றவராகவே கருதப்படுவார். அத்துடன் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையையோ அல்லது அங்கீகாரத்தையோ பெற்ற எந்த நபரையும் பதவி நீக்குவதாயின் அது நாடாளுமன்றத்தில் 2/3 அங்கீகாரத்தைப் பெற்றே நீக்க முடியும். மேலும் மே மாதம் 2015 முதல் ஜனவரி 2019 வரை அரசியலமைப்புப் பேரவை என்ற பெயருடன் இருந்த போதும் அதனுடைய செயற்பாடுகள் தொடர்பான காரணங்களை நாம் ஆராய வேண்டும என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற அரசியல் யாப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர்களாக,

(1) பிரதமர்

(2) சபாநாயகர்

(3) எதிர்க்கட்சித் தலைவர்

(4) ஜனாதிபதியால் நியமிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்

(5) பிரதமர் எதிர்க்கட்சித் தலைவரும் "ஒருமித்து" நியமிக்கும் ஐவர். அவர்களுள் இருவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(6) நாடாளுமன்றத்தில் ஏனைய கட்சிகள் சேர்ந்து நியமிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

இவர்களே அந்த யாப்பு பேரவையின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

நான் மேலே குறிப்பிட்ட காலப் பகுதியில் எதிர்க்கட்சிப் பதவியில் இருந்தவர்களும் அரசாங்கத்தில் சேர்ந்தவர்களாகச் செயற்புட்டு "எதிர்க்கட்சி" என்பதற்குப் புதிய அர்த்தம் கொடுத்தார்கள்.

ஒத்தூதுவது ஆளும் கட்சிக்கு! ஒட்டுக்கட்சியாக ஒட்டியிருந்ததே எதிர்க்கட்சி ஆசனத்தில்!! உலகில் எங்குமே நடந்திருக்காத விசித்திரமான அரசியல் நாடகம் இது.

கண்மூடி, கை கட்டி, வாய் பொத்திக்கொண்டு வாக்குறுதி வழங்கிய மக்களுக்கு கண்கட்டி வித்தை காட்டும் இவர்களா? தமிழ்த்தேசியத்தை உச்சரிக்க தகுதி உடையவர்கள்? அதைத்தான் ஒருமித்து இருத்தல் என்று அவர்கள் கொள்கை விளக்கம் கொடுத்து வருகிறார்கள்.

அவர்கள் "ஒருமித்து சும்மா" இருந்த கட்சிதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனப்பெயரிடப்பட்டு இருக்க வேண்டும். அவர்கள் "சும்மா" இருந்தது அரசாங்கக் கட்சியில்தான். அத்தோடு, நாடாளுமன்றத்தில் இருந்த சிறு கட்சிகளின் பிரதிநிதியும் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருந்தார். ஒட்டுமொத்தமாக ஜனநாயகத்துக்கு சவால் விட்டுக் கொண்டு ஒரு பக்கத்தில் 9 பேரும் மறுபக்கத்தில் ஒருவருமே அரசியலமைப்புப் பேரவையில் இருந்தனர். இத்தகைய வலையமைப்பு முறையில் செயல்பட்ட அரசியலமைப்புப் பேரவை சாதித்தது என்ன?

மேலும், எந்த ஓர் ஆணைக் குழுவின் உறுப்பினரையும் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியில்லாமல் ஜனாதிபதி அகற்ற முடியாது என்ற கர்வத்தினால், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு எதிராகத் துணிந்து வழக்குத் தாக்கல் செய்ய முனைந்திருக்கிறது. நல்ல காலம், இந்த அரசியலமைப்புப் பேரவையில் மாற்றங்கள் ஏற்படும் போல் தெரிகிறது. அல்லது, நாடே நாசமாகிவிடும். அன்று பேராசிரியர் வில்சன் எதிர்வு கூறிச்சென்ற வார்த்தைகள் உண்மையாகி விடாமல் பாதுகாக்க வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவையின் அமைப்பை மீள் பரிசீலித்தல் வேண்டும். எதிர்க்கட்சி என்பது அரசாங்கத்துடன் "ஒருமித்து" இருக்கும் கட்சியாக இருத்தல் ஆகாது என்ற யதார்த்தத்தை இனியாவது நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். ஜனாதிபதியால் நியமனம் பெறும் அனைவரும் சுயாதீனமாக இயங்குவதற்கான செயற்பாடுகள் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாணவர்கள் மீதான தாக்குதலை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(மண்முனை)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முதலைக்குடா மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து மாணவர்களும் பெற்றோர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை பாடசாலையின் வாயிற்கதவை மூடி பதாகைகளை ஏந்தியவாறு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முதலைக்குடா மகா வித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

அதன் ஒருகட்ட விளையாட்டுப் போட்டி அருகிலுள்ள முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் அம்மைதானத்திற்குள் திடீரென புகுந்த சில குண்டர்கள் அங்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் முதலைக்குடா மகாவித்தியால்யத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் பாதிக்கப்பட்டு மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மேற்படி பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மாணவர்கள் மீது தமது காட்டுமிராண்டித் தாக்குதலை மேற்கொண்டவர்களை உடன் கைது செய்யுமாறும் இவ் விடயத்தில் பொலிஸார் துரிதமாகச் செயற்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்துள்ளனர்.

பாரபட்சமின்றி பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதி வழங்கு, மாணவர்களைத் தாக்கியவர்களை உடன் கைது செய், முன்னேறும் வலயம் இது முதுகில் குத்தாதே! உள்ளிட்ட பல வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்களும் பெற்றோரும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற இடத்திற்கு விரைந்த கொக் கட்டிச்சோலைப் பொலிஸ் நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ்குழுவினர் நிலைமையை ஆராய்ந்து ஆர்ப்பாட்டக் காரர்களுடன் கலந்துரையாடி பாடசாலை மாணவர்களைத் தாக்கிய வர்களை கைது செய்வதாக உத்தரவாதமளித்துள்ளனர். (இ-7)

# அத்துமீறி நுழைந்த இழுவைப்படகை அரசுடைமையாக்க உத்தரவு கிளி/நீதிமன்று வழங்கிய தீர்ப்பால் கடற்றொழிலாளர்கள் மகிழ்ச்சி

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப்படகை அரசுடைமையாக்குமாறு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றால் கட்டளை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் 11 பேர் கடந்த 13 ஆம் திகதி இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், இலங்கை கடற்றொழில் நீரியல்வள அதிகாரிகளால் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அக்குற்றப்பகர்விற்கு குறித்த இந்திய மீனவர்கள் தாங்கள் குற்றவாளிகள் என மன்றுரை செய்ததைத் தொடர்ந்து, அவர்களை குற்றவாளிகளாகக் கண்ட நீதவான் 11 ரேக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்கி இருந்தார்.

குறித்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட, பூநகரி மீன்பிடி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர். குறித்த படகின் உரிமையாளர் மன்றில் பிரசன்னமாகியிருந்ததுடன் அப்படகை விடுதலை செய்யுமாறு தனது சட்டத்தரணி ஊடாக விண்ணப்பம் ஒன்றை செய்திருந்தார்.

இதனை ஆட்சேபித்த வழக்குத் தொடுநர் தரப்பு சட்டத்தரணிகள் தமது நீண்ட வாதத்தினை முன்வைத்தனர். குறிப்பாக இந்திய மீனவர்கள் இலங்கை இறையாண்மையையோ அல்லது இலங்கை சட்டங்களையோ மதிப்பதில்லை, மிகப் பெரிய படகுகளில் மிக அதிக அளவில் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதால் இலங்கை கடல் வளம் மிக வேகமாக அழிவடைந்து வருகிறது.

சட்டங்களுக்கு ஏற்றவாறு குறித்த படகும், இயந்திரமும், அதில் இருக்கும். ஏனைய உபகரணங்களும் களஞ்சிய பண்டங்களும் மீன்களும் மீன் தாவரங்களும் கட்டாயம் அரசுடைமையாக்கப்பட வேண்டும், இவ்வாறு இலங்கை சட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் மட்டுமே எமது மீனவர்களின் உரிமையைப் பாதுகாக்க முடியும் என தமது வாதங்களை முன்வைத்தனர்.

மேற்கூறிய இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதவான் குறித்த படகையும் அதிலிருந்த இயந்திரம், மீன்கள் உட்பட ஏனைய பொருட்களையும் அரசுடைமையாக்கும் கட்டளையை வழங்கித் தீர்ப்பளித்தார்.

குறித்த தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தமது தொழிலாளர்களுக்கு வெற்றி என பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்தினர் தெரிவித்துள்ளனர். (9-84)

# சாரணிய தந்தையின் 162 ஆவது பிறந்த தின நிகழ்வு



வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் சாரணியத்தின் தந்தை ராபர்ட் பேடன் பவல் பிரபுவின் 162 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் பொன்னையா சிவநாதன் தலைமையில்



நடைபெற்ற இந்த நிகழ்வில் பேடன் பவல் பிரபுவின் செயற்பாடுகள் தொடர்பாகவும், சாரணரியத்தின் வளர்ச்சி தொடர்பாகவும் கருத்துரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்களான கருணாகரன் மதி, உதவி அதிபர் றொசான், பெண் சாரணியத்தின் ஆசிரியர் திருமதி. யசோதா, பாடசாலையின் உதவி சாரண தலைவரும் ஜனாதிபதி சாரணருமாகிய வ.பிரதீபன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-15-250)

# இராகு-கேது பெயர்ச்சி - 2019

## 13.02.2019 – 31.08.2020

பெப்ரவரி 13 ஆம் திகதி இராகு-கேது பெயர்ச்சி நிகழ இருக்கிறது. உங்கள் இராசிக்கு இதுவரை அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான் இப்பொழுது சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 2 இல் சஞ்சரித்த கேது பகவான் ஜென்ம இராசிக்கு வருகிறார்.

உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இராகு பகவான் புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்திலும் பிறகு திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் மிருகசீரிட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்திலும் சுமார் 11/2 ஆண்டுகள் சஞ்சரிக்கப் போகிறார். அதேபோல கேது பகவான், உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்திலும் பூராடம் நட்ச்த்திரக் காலில் சுக்கிர சாரத்திலும் மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்திலுமாக சஞ்சரிப்பார்.

இந்த நட்சத்திரப் பாதசார அடிப்படையிலும் குருப்பெயர்ச்சி மற்றும் குருவின் அதிசார காலம் சனியின் வக்கிர இயக்க காலத்திற்கு ஏற்பவும் சுய ஜாதகத்தின் தசாபுத்திப் படியும் உங்களுக்குரிய பலன்கள் நடைபெறும்.

**திருப்பம்தரும்ஏழாமிடத்து இராகு!**
**சிந்திக்க வைக்கும் ஜென்ம கேது!**

உங்கள் இராசிக்கு 7 ஆம் இடமான சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார் இராகு பகவான். இது களத்திர ஸ்தானம் ஆகும். திருமண வயதடைந்த ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் இக்காலத்தில் திருமணப் பேச்சுக்கள் வரத் தொடங்கும். இராகுவைப் போல கொடுப்பானுமில்லை என்பதால் நிறைய வரன்கள் வந்து அலைமோதும். 'நீங்கள் எங்களுக்கு வரதட்சணை எதுவும் தர வேண்டாம் மணமாலைசூட பெண்ணை அனுப்பி வைத்தால் போதும்' என்று கேட்டு கெஞ்சுவார்கள். ஆனால் எல்லா விபரங்களையும் அறிந்து கொண்டு, திருமணப் பொருத்தமும் பார்த்து முடித்துக் கொள்வது தான் முறையானதாகும். வெளிநாட்டு யோகமும் ஒரு சிலருக்கு வாய்க்கும். வியாபாரத்தில் புதிய பங்குதாரர்கள் வந்து இணைவார்கள்.

2 ஆம் இடத்தில் இருந்து ஜென்ம இராசிக்கு பெயர்ச்சியாகும் கேதுவால், குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தலை தூக்கலாம். கோபம் கொஞ்சம் உங்களுக்கு அதிகமாகவே வரலாம். மற்றவர்கள் தங்களை மதிக்கவில்லையே என்று பின் விளைவைச் சிந்திக்காமல் பேசிவிடுவீர்கள். கேது, ஞானகாரகன் என்பதால் இறைவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நீங்கள் செய்யும் காரியங்களில் ஓரளவேனும் வெற்றி கிடைக்கும். எதைச் செய்தாலும் குடும்ப உறுப்பினர்களை கலந்து ஆலோசித்து செய்வது நல்லது. அதே நேரத்தில் முன்னோர் வழிபாட்டிலும் மகான்கள் வழிபாட்டிலும் கவனம் செலுத்துங்கள். ஆரோக்கியத்தில் தான் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்படும். எனவே அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். யாருக்காவது வாக்குக் கொடுத்தால் அதைக் கடைசி நேரத்தில் தான் காப்பாற்ற இயலும். வீடு, வாகனம் வாங்கும் அமைப்பும் இதுபோன்ற விரய காலத்தில் உண்டு. தான தர்மங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

குறிப்பாக 13.3.2019 முதல் 17.5.2019 வரை, தனுசு இராசிக்கு அதிசார கதியில் குரு வரும் நேரம் உங்களுக்கு பொற்காலமாக அமையப் போகிறது. கேதுவோடு இருந்தபடி இராகுவையும் பார்வை செய்கிறார் குரு பகவான். இதனால் அற்புதமான பலன் கிடைக்கும். அனைத்துத் தடைகளும் அகலும். மனக்கலக்கம் மாறி மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பீர்கள். பகைவர்கள் பின் வாங்குவர். பணவரவு திருப்தி தரும்.


**குரு சாரத்தில் இராகு சஞ்சாரம்**
**(13.2.2019 முதல் 19.8.2019 வரை)**

புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, நிதானமாகச் செயற்படுவது நல்லது. அரசுப் பணியில், அரசாங்கப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத நல்ல திருப்பங்கள் வரும். இடையூறுகள் ஏற்பட்டு அகலும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பம்பரமாகச் சுழன்று பணிபுரிவீர்கள். தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர். கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர் குரு என்பதால், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். மனக்கவலை மாற குருவை வழிபடுவது நல்லது.

திறமையைப் பார்த்துப் பாராட்டுவதோடு, கேட்ட சலுகைகளையும் வழங்குவர். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(13.2.2019 முதல் 16.4.2019 வரை)**

உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். அரசு வழியில் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்துவீர்கள். பங்காளிப் பகை மாறும். பட்டம் முடித்தவர்களுக்கு சரியான வேலை கிடைக்கும். ஒரு சிலருக்கு சம்பள உயர்வு பற்றிய நல்ல தகவலும் வந்து சேரும். தசாபுத்தி பலமிழந்தவர்களுக்கு முன்கோபத்தின் காரணமாக பல நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லும். எனவே கோபத்தைக் குறையுங்கள்.



**கவனம் தேவைப்படும் காலம்**

இராகு-கேது பெயர்ச்சி நிகழப் போகிறது. கேது பகவான் மகரத்தில் இருந்து உங்கள் இராசிக்கு இடம் பெயர்கிறார். அங்கு ஏற்கனவே இருக்கும் சனியோடு இணைந்து சஞ்சரிக்கப் போகிறார். அப்படி சஞ்சரிக்கும் வேளையில், 8.5.2019 முதல் 3.9.2019 வரையான காலத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். இந்த காலகட்டத்தில் நீங்கள், கொஞ்சம் நிதானமாக செயற்பட வேண்டியது அவசியம். அதே நேரத்தில் கவனமாகவும் இருக்க வேண்டும். யாருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். அது பெரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கலாம். உடன் இருப்பவர்களால் கூட உங்களுக்கு உபத்திரவங்கள் வந்து சேரும். கடன் சுமை கூடிக்கொண்டே செல்லும். பிறரை விமர்சிப்பது என்பது, பிரச்சினைகளை விலை கொடுத்து வாங்குவதற்கு சமமாகும். எந்தக் காரியம் நடைபெற வேண்டுமானாலும் கொஞ்சம் வளைந்து கொடுத்துச் செல்லுங்கள். ஆரோக்கிய பாதிப்புகளும் அதனால் செலவும் உண்டு.

## ஏழில் இராகு வருகிறது! குடும்ப நலம் பெற வழிபாடு!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

**சுய சாரத்தில் இராகு சஞ்சாரம்**
**(20.8.2019 முதல் 27.4.2020 வரை)**

திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் உள்ளவர்களால் குழப்பங்கள் உருவாகலாம். எதிலும் மனதைச் செலுத்த முடியாத நிலை உருவாகும். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையோடு அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. மறைமுக எதிர்ப்பு அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கை உயரும். ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எந்த ஒரு வேலையையும் ஒருமுறைக்கு இருமுறை செய்ய வேண்டியதிருக்கும். சொந்த பந்தங்களின் அரவணைப்புக் குறையும். சுபகாரியங்களில் தடை ஏற்படும். எதிலும் அவசரம் காட்ட வேண்டாம். குடும்ப இரகசியங்களை வெளியில் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

**செவ்வாய்சாரத்தில்இராகுசஞ்சாரம்**
**(28.4.2020 முதல் 31.8.2020 வரை)**

மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, இருண்ட சூழ்நிலை மாறும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வழிபிறக்கும். போட்டியாளர்கள் விலகுவர். பொன், பொருள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதற்காக ஒரு பெரும் தொகையைச் செலவிடுவீர்கள். சொத்து வாங்கும் யோகம் உண்டு. கூட்டாளிகள் ஒற்றுமையுடன் செயற்பட்டு உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். உத்தியோகத்தில், அதிகாரிகள் உங்கள் பெற்றவர்களின் பழக்கம் ஏற்படும்.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(17.4.2019 முதல் 23.12.2019 வரை)**

பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ் சரிக்கும் பொழுது, உத்தியோக மாற்றங்கள் உருவாகும். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். வீடு மாற்றம் விரும்பியபடி அமையும். வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். அதேநேரம் கடனாக பெரும் தொகை கொடுத்தால் பிரச்சினைகள் உருவாகும். வெளிநாட்டு யோகம் உண்டு.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(24.12.2019 முதல் 31.8.2020 வரை)**

மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் காலமானது, ஒரு இனிய காலமாக அமையும். உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து




எதையும் சிந்தித்து செயற்படுவதன் மூலம் சந்திக்கும் நன்மைகள் ஏராளமாகக் கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி உண்டு. புத்துணர்ச்சியோடு செயற்பட்டு எதிர்காலத்தை இனிமையாக்கிக் கொள்வீர்கள். படிப்பிலிருந்த தடை அகலும்.

**வழிபாடு**

சப்தம இராகுவால் சங்கடங்களில் இருந்து விடுபடவும் ஜென்ம கேதுவால் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கவும் வடக்கு நோக்கிய விநாயகரை வழிபடுவது நல்லது. வியாழக்கிழமை தோறும் குருவை வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி பல நன்மைகளை வழங்கப் போகிறது. ஜென்ம கேதுவால் சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும். மனக்குழப்பம் ஏற்படாமல் இருக்க மற்றவர்களின் ஆலோசனை கைகொடுக்கும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஆதரவால் ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். எதைச் செய்தாலும் குடும்பப் பெரியவர்களை ஆலோசித்துச் செய்யுங்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பெற்றோர் வழியிலும், சகோதர வழியிலும் சுமுகமாக செல்வதன் மூலம் மட்டுமே, பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். பணப்புழக்கம் அதிகமாக இருந்தாலும், அதற்கு சமமான விரயங்களும் உண்டு. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கலாம். குரு வழிபாடும், நாகசாந்திப் பரிகாரமும் நன்மையைத் தரும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள்.

(தொடரும்)

# உள்ளூர் இழுவைப் படகுகளால் பாதிப்பு

## நடவழக்கை எடுக்குமாறு இரணைதீவு மீனவர்கள் கோரிக்கை

(பூநகரி)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் இழுவைப் படகுகள் பல கடந்த புதன்கிழமை நள்ளிரவு பூநகரிப் பிரதேச இரணைதீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து தொழிலில் ஈடுபட்டதால் பூநகரி பிரதேச மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தால் 10க்கு மேற்பட்ட மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டதோடு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகளும் சேதமாக்கப்பட்டதாக தெரிவித்துள்ள அப்பகுதி மீனவர்கள் இவ்விடயம் சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுத்து இச்சட்ட விரோத தொழிலை கட்டுப்படுத்துமாறு பூநகரி கடற்றொழில் சங்க சமாசத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-84)

# கடற்படையால் அச்சுறுத்தல்

# பாதுகாப்பு வழங்கக் கோரி சிலாவத்துறை மக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(மன்னார்)

தொடர்ச்சியாக இனம் தெரியாதவர்களும் கடற்படையினரும் அச்சுறுத்தும் விதமாக நடந்து கொள்வதாகவும் கடற் படை முகாமுக்கு வெளியில் இருந்து போராட்டத்தில் ஈடுபடும் மக்களை கடற்படையினர் புகைப்படம் எடுப்பதாகவும் தெரிவித்து தமக்கு பர்துகாப்பு வழங்க கோரி சிலாவத்துறை மக்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை மக்களுக்குரிய 36 ஏக்கர் காணிகளில் தற்போது கடற்படை முகாம்களை அமைத்துள்ளது. இந்த நிலையில் சுமார் 218 இற்கு மேற்பட்ட மக்களின் காணிகள் அவ்வாறு கடற்படை வசமாக காணப்படுவதனால் கடற்படை வேறு இடத்திற்கு முகாமை மாற்றி குறித்த காணியை உரிய மக்களுக்கு வழங்கக் கோரி அப்பகுதி மக்கள் கடந்த புதன்கிழமை தொடக்கம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தங்களுடைய போராட்டத்தின் போது இனம் தெரியாதவர்களும் கடற்படையினரும் தொடர்ந்து அச்சுறுத்தும் விதமாக நடந்து கொள்வதாகவும் போராட்டத்தில் ஈடுபடும் அனைவரையும் புகைப்படம் எடுப்பதாகவும் தெரிவித்த மக்கள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (msedo) ஆலோசனையின் பெயரில் நேற்றுக் காலை மன்னார் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உப அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

தொடர்ச்சியாக எங்களை அச்சுறுத்தும் விதமாக கடற்படை நடந்து கொள்வதால் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தருமாறும் எவ்வாறான அச்சுறுத்தல் வந்தாலும் கடற்படை தங்கள் காணிகளை விட்டு வெளியேறும் வரை போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இன்றுடன் நான்காம் நாளாக சிலாவத்துறை கடற்படைக்கு முன்பாக மக்கள்தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# 'நல் நிலைக்கான பயணம்' நேற்று ஆரம்பம்





'நல் நிலைக்கான பயணம்" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு நடைபயணம் நேற்று வவு னியாவிலிருந்து முல்லைத் தீவு நோக்கி ஆரம்பிக்கப்பட்டது.

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தால் ஏற்பாடு செய் யப்பட்டு வவுனியா மாவட்டச் செயலக முன்றலில் ஆரம்பமாகிய குறித்த நடைபயணம் எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 3 மணியளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நிறைவடையும்.

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு வரையுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களைக் கடந்து சென்று எமது சமூக மத்தியிலுள்ள ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை நடைபயணம் ஊடாக வலியுறுத்தப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்ப நிகழ்வில் மாவட்டச் செயலர் எம்.ஹனீபா, குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் லகிரு பெரேரா, சுகாதார வைத்திய அதிகாரி லவன், பிரதேச செயலர் கா.உதயராஜா, அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-15)





## இ.போ.ச.பணியாளர்கள் 66 பேருக்கு பதவி உயர்வு

வட பிராந்திய போக்குவரத்து சபையின் மன்னார் சாலையில் பணியாற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமான "ஜாதிக்க சேவை" சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள ஊழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தத்தமது பணிகளில் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

சாரதிகள், நடத்துநர்கள், அலுவலக உதவியாளர்கள்.இயந்திரப் பொறியியல் பகுதியில் பணியாற்றும் தொழில் நுட்பவியலாலர்கள், எழுது வினைஞர்கள் மற்றும் சாலை பரிசோதகர்கள் என சுமார் 66 பணியாளர்களுக்கு மேற்படி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பதவி உயர்வுக்கான கடிதங்கள் மன்னார் போக்குவரத்துச் சபை டிப்போவில் நடைபெற்ற வைபவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஏ.சமியூ முகம்மது பஸ்மியினால் ஊழியர்களுக்கு வைபவ ரீதியாக கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வழங்கி வைக்கப்பட்டது. (9-285)

# தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை வைத்திருந்த ஐவர் அதிரடியாக கைது

வவுனியாவில் தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் நடத்திய திடீர் சுற்றிவள்ளைப்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போகஸ்வெவ பகுதியில் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பில் நன்னீர் மீன்பிடித்தலுக்காக தடை செய்யப்பட்ட சட்டவிரோதமான தங்கூசி வலைகளை வைத்திருந்த குற்றத்திற்காக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட வலை மற்றும் நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றி வளைப்பினை தேசிய நீர் உயிரினச்செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய நீரியல் விரிவாக்கல் அலுவலகத்தின் வவுனியா, மன்னார் மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோகநாதன் நிசாந்தன் தலைமையில் அலுவலக உத்தியோகத்தர்கள், மடுகந்தை விசேட அதிரடிப்படையின் நிலைய பொறுப்பதிகாரி மனோஹராவின் நெறிப்படுத்தலில் விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இவ் விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வவுனியா, மன்னார் மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோகநாதன் நிசாந்தன்,

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை உபயோகித்து மீன்பிடிப்பதன் மூலம் நன்னீர் மாசடைவதாகவும் குளங்களில் மீன்களின் உயிரிழப்புக்கள் அதிகம் ஏற்படுவதாகவும் தொடர்ந்தும் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். (9-250)

## இன நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் நோக்கில் கற்றல் உபகரணப் பொருட்கள் வழங்கல்



இன நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் வடக்கில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு தென்பகுதியிலிருந்து வந்த பௌத்த மதத் தலைவர்களால் கற்றல் உபகரணம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த பௌத்தமத துறவிகள் அடங்கிய குழுவினர் கிளிநொச்சி இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் சுமார் 300 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பகிர்ந்தளித்தனர்.

தென்னிலங்கையில் உள்ள மதத் தலைவர்களால் மடிப்பிச்சை மூலம் பெற்றுக் கொண்ட உதவிகளே மேற்படி மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும், இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நிகழ்வுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்திருந்தனர். (9)

# தொடரும் மனித புதைகுழி அகழ்வு

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியானது 149 ஆவது நாளாக நேற்று தொடர்ச்சியாக சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

தொடர்ச்சியாக ஆய்வு முடிவுகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் குறித்த பரிசோதனையை நடத்திய ஆய்வு நிறுவனத்தின் ஊடாக நேரடியாக மன்னார் நீதிமன்றத்திற்கு எந்த முடிவுகளும்அனுப்பிவைக்கப்படாத காரணத்தினால் சட்ட வைத்திய அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமானது இன்னமும் வெளியிடப்படவில்லை

இந்தநிலையில் நேற்று முன்தினம் குறித்த புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பாகவும் அகழ்வுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதா? என்பது தொடர்பாகவும் மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியின் நிர்வாக கட்டமைப்பு தொடர்பான விடயங்கள் தொடர்பாகவும் மன்னார் நீதிமன்றத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி, சட்டவைத்திய அதிகாரி. காணாமல் போனோர் அலுவலக பிரதிநிதி. காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக வாதிடும் சட்டத்தரணிகள் கலந்து கொண்டதாக அறிய முடிகின்றது. அதேநேரம் நேற்றும் வழமைபோன்று அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இதுவரை குறிப்பிட்ட வளாகத்திலிருந்து 323 இற்கு மேற்பட்ட முழு மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 314 மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (9-285)

# இரண்டாவது தடவையாக திறந்து வைக்கப்பட்ட கிளி.பசுமைப் பூங்கா



கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் 40 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பசுமை பூங்கா நேற்று மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதே பசுமை பூங்கா கரைச்சி பிரதேச சபையின் ஏற்பா ட்டில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று அமைச்சரால் இரண்டாவது முறையாக திறக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிடம் வினவிய போது. இது எங்களுடைய அமைச்சின் நிதியில் மேற்கொள்ளப்பட்ட பணியாகும். கடந்த முறை நாட் டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக எம்மால் சமுக மளிக்க முடியாது போய்விட்டது. எனவே இன்றைய தினம் (நேற்று) வருகை தந்து திறந்து வைத்துள்ளோம் என்றார்.

இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், கரைச்சி பிதேச சபையின் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-312)

# பாரதம்

## விவசாயக்கடன் தள்ளுபடி விவகாரம்; மும்பை நோக்கி விவசாயிகள் பேரணி



(மும்பை)


விவசாயக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மகாராஷ்டிரா விவசாயிகள் நேற்று முன்தினம் நாசிக்கில் இருந்து மும்பை நோக்கி பிரமாண்ட பேரணியை ஆரம்பித்தனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இதே கோரிக்கையை வலியுறுத்தி மகாராஷ்டிர விவசாயிகள் மும்பை நோககி பேரணி நடத்தினர். அப் போது ரூ. 34,000 கோடி மதிப்பிலான விவசாய கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தலைமையிலான பா.ஜ.க. அரசு அறிவித்தது.

ஆனால் ரூ.17,000 கோடி மதிப்பிலான கடன்கள் மட்டுமே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. பல்வேறு வாக்குறுதிகளை மாநில அரசு நிறைவேற்றவில்லை என்று விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி அகில இந்திய கிசான் சபா சார்பில் நாசிக்கில் இருந்து மும்பை நோக்கி நேற்று பிரமாண்ட பேரணி தொடங்கியது. இதில் 50 ஆயிரம் பேர் பங்கேற்று பேரணியாக சென்றனர். இந்த பேரணி வரும் மார்ச் 2ஆம் திகதி மும்பையை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது மேலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பேரணியில் இணைவார்கள் என்று அகில இந்திய கிசான் சபா தெரிவித்துள்ளது. (7)

## பங்களாதேஷில் அடுக்... பலி எண்ணிக்கை 85



(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் பழைமையான இடங்களில் ஒன்று சாவ்க்பஜார். இந்த பகுதியில் உள்ள மிகப் பழைமையான அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் கடந்த புதன் கிழமை இரவு பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. குடியிருப்பின் ஒரு பகுதி இரசாயனப் பொருட்களை சேமித்து வைக்கும் குடோனாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த குடோனில் பிடித்த தீ. பின்னர் மளமளவென பரவியது.

தகவலறிந்த தீயணைப்பு படையினர் ... இடத்தி... அனை... ஆ...

## ராஜீவ் கொலை வழக்கு

## ஏழு தமிழர்களையும் விடுவிக்க முதலமைச்சர் வலியுறுத்த வேண்டும்

### ஸ்ராலின் கோரிக்கை



(சென்னை)

ஆளுநரைச் சந்தித்து பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுவிக்க, முதலமைச்சர் வலியுறுத்த வேண்டும் என தி.மு.க தலைவர் மு.க.ஸ்ராலின் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

தி.மு.க தலைவர் மு.க. ஸ்ராலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும் தெரியவருவதா வது, இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அமைச்சரவை கூடி தீர்மானம் நிறைவேற்றியது. அதனை தமிழக ஆளுநருக்கும் அனுப்பி வைத்தனர். ஆனால் இன்னும் அமைச்சரவை தீர்மானத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆளுநர் உத்தரவு பிறப்பிக்காமல் தொடர்ந்து அமைதி காப்பது மிகுந்த கவலையளிக்கின்றது. இவர்களது விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழர்களுக்கு இது பெரும் ஏமாற்றத்தையும், ஆதங்கத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

எனவே, இவர்களின் விடுதலை குறித்து மத்திய அரசுக்கு உடனடியாக அரசியல் ரீதியான அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன் தமிழ்நாடு ஆளுநரை நேரில் சந்தித்து அமைச்சரவைத் தீர்மானத்தினை ஏற்றுக்கொண்டு, 7 தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்க முதலமைச்சர் பழனிச்சாமி வலியுறுத்தவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள்பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த் 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி சென்னையை அடுத்துள்ள ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, றொபேர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.(7)

## எகிப்தில் காசிம் பராகாத்...

## குற்றவாளிகளுக்கு மரணத...



(கெய்ரோ)

எகிப்தில் காசிம் பராகாத் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகள் 28 பேரில் 9 பேருக்கு ஒரே நேரத் தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

எகிப்து நாட்டின் சிரேஷ்ட அரச சட்டத்தரணியாக இருந்து வந்தவர் காசிம் பராகாத். இவர் பயங்கரவாதிகளுக்கு எதிரான வழக்கில் அரசு தரப்பில் ஆஜராகி, எண்ணற்ற பயங்கரவாதிகளுக்கு தண்டனை வாங்கி கொடுத்துள்ளார்.

கடந்த 2015 ஆம்ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி தலைநகர் கெய்ரோவில் காசிம் பராகாத் சென்று கொண்டிருந்த கார் மீது, பயங்கரவாதிகள் வெடிகுண்டு நிரப்பிய காரை மோதி வெடிக்க செய்தனர். இந்த தாக்குதலில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. காசிம் பராகாத் கொலை வழக்கில் பயங்கரவாதிகள் 28 பேர் கைது செய்யப்பட்டனர். வழக்கு விசாரணையில் 28 பேரும் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டு, கடந்த 2017 ...

## இந்திய இராணுவம் தாக்கினால் தக்க பதிலடி கொடுங்கள்

### பாக்.பிரதமர் இம்ரான் உத்தரவு





(இஸ்லாமாபாத்)

இந்திய ராணுவம் தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி கொடுங்கள் என்று பாகிஸ்தான் ராணுவத்துக்கு அந்த நாட்டின் பிரதமர் இம்ரான் கான் கட்டளையிட்டுள்ளார்.

காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் துணை இராணுவ படையினர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 45 பேர் உயிரிழந்தனர். இந்த கொடூர தாக்குதலுக்கு இந்தியா மட்டுமன்றி உலக தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்தனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானில் செயற்படும் ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பு தான் காரணம் என இந்தியா குற்றம் சாட்டியது.

இதற்கு பதிலடி கொடுக்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி ஆவேசமாக கூறினார். இந்தியா போர் தொடுத்தால் தாக்குதலுக்கு தயாராக உள்ளதாக பாகிஸ்தானும் தெரிவித்தது. இதனால் இரு நாடுகளிடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தை அந்நாட்டின் பிரதமர் இம்ரான்கான் நேற்று கூட்டினார். கூட்டத்தில் இராணுவ தளபதி காமர் ஜாவத் பஜ்வா, துணை தளபதிகள், உளவுப்பிரிவு மற்றும் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள், நிதித்துறை, இராணுவத்துறை, வெளியுறவுத் துறை, உள்துறை அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் போது, நாட்டின் பாதுகாப்பு அம்சம், போர் வந்தால் எடுக்க வேண்டிய நடவடிக்கை உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும் உளவு பார்த்ததாக கைது செய்யப்பட்டு பாகிஸ்தான் சிறையில் இருக்கும் இந்திய கடற்படை முன்னாள் அதிகாரி குல்பூஷண் ஜாதவ் வழக்கை சர்வதேச நீதிமன்றில் எதிர்கொள்வது குறித்தும் ஆலோசித்தனர்.(7)

## பொருளாதாரத் தடைகளி... வடகொரியாவிற்கு நிவார... ஐ.நாவிடம் சீனா வலி...



(பீஜிங்)

பொருளாதாரத் தடைகளிலிருந்து வடகொரியாவிற்கு நிவாரணமளிப்பது தொடர்பாக கருத்திற் கொள்ளுமாறு சீனா, ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தியுள்ளது.

பீஜிங்கில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது சீன வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் கெங்ஷ் வாங் இதனைத்தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "வடகொரியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளையும், சந்திப்புகளையும் சீனா தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

இந்நிலையில், வியட்நாமில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள இரண்டாவது உச்சிமாநாடு வெற்றிகரமாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

# வெளிநாடு

## அடுக்கு மாடியில் தீ ... 85 ஆக உயர்வு!



...யினர் சுமார் 200 பேர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அங்கு எளிதில் தீப்பற்றக்கூடிய இரசாயனப் பொருட்கள் இருந்ததால் தீ வேகமாக பரவியது. தீயை அணைக்க நீண்ட நேரம் ஆனது. இந்த தீ விபத்தில் சிக்கி 70 பேர் பலியானதாக முதல் கட்டமாக தகவல் வெளியானது.

இந்நிலையில், தீ விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 81 ஆக அதிகரித்துள்ளது. மேலும் பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என மீட்புக்குழுவினர் தெரிவித்தனர். (7)

## பாகிஸ்தானில் கன மழை 26 பேர் உயிரிழப்பு!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கியும், வீடுகள் இடிந்து விழுந்ததிலும் 26 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள பல்வேறு நகரங்களில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. கொட்டித் தீர்த்த பெருமழையால் இங்குள்ள ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது.

வெள்ள நீரில் மூழ்கியும், வீட்டின் மேற்கூரைகள் சரிந்தும், நிலச்சரிவில் சிக்கியும் இங்குள்ள கைபர் பக்துன்வா மாகாணத்தில் வெள்ளத்தில் சிக்கி 10 பேர் பலியாகினர். திர் பகுதியில் நிலச்சரிவு மற்றும் மழையால் மேற்கூரை இடிந்து விழுந்த விபத்தில் ஒரு பெண் மற்றும் குழந்தைகள் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

இதேபோல்., பஞ்சாப் மாகாணத்தில் உள்ள முல்தான், பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள லாஸ் பெல்லா மற்றும் பருகாபாத், கதுவா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் வெள்ளத்தில் சிக்கி 12 பேர் பலியாகினர்.


பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த உணவு தானியங்களும், பழத்தோட்டங்களும் நாசமடைந்தன. நூற்றுக்கணக்கான வீடுகளும் சேதமடைந்தன.

### நூற்றுக்கணக்கான வீடுகள் சேதம்



வெள்ளம் பாதித்த பகுதிகளில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர்மேலாண்மை குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர் என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (7)

## ...காத் கொலை வழக்கு; ...னதண்டனை நிறைவேற்றம்



...ஆம் ஆண்டு அவர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், அந்த 28 பேரில் 9 பேருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. கெய்ரோவில் உள்ள சிறையில் 9 பேரும் தூக்கிலிடப்பட்டனர். இந்த மாதத்தில் மட்டும் இவர்களுடன் சேர்த்து மொத்தம் 15 பேருக்கு மரண நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (7)

## அமெரிக்காவுக்கெதிராக ஏவுகணைகளை நிலைநிறுத்தத் தயார்- விளாடிமிர் புடின்

(மொஸ்கோ)

அமெரிக்காவுக்கு எதிராக அணு ஆயுத ஏவுகணைகளை நிலைநிறுத்த ரஷ்யா தயாராக உள்ளது என அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்து கருத்து தெரிவித்த போதே, அமெரிக்காவுடனான ஆயுத போட்டியை ரஷ்யா விரும்பவில்லை என கூறினார்.

இதே நேரத்தில் ரஷ்யாவை குறி வைத்து அணு ஆயுத ஏவுகணைகளை ஐரோப்பிய நாடுகளில் நிறுத்த அமெரிக்கா முயற்சி செய்வதாகவும் அவர் கூறினார்.



ஏவுகணைகளை ஏவி மொஸ்கோவை தாக்கும் வகையில் அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக கூறிய அவர், இதற்கு பதிலடி கொடுக்க ரஷ்யாவும் தயாராக இருக்கின்றது என கூறினார்.

அமெரிக்காவுக்கு அருகில், சர்வதேச கடல் பரப்பில் ரஷ்யா கப்பல்கள், நீர்மூழ்கிகள் அணு ஆயுத ஏவுகணைகளுடன் நிறுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்த நிலையை அமெரிக்கா விரும்புகிறதா என கேள்வியெழுப்பிய அவர் அமெரிக்காவின் எந்தச் சவாலையும் எதிர்கொள்ள ரஷ்யா முழு அளவில் தயாராக இருக்கின்றது என விளாடிமிர் புடின் குறிப்பிட்டுள்ளார். (7)

## ...களிலிருந்து ...வாரணமளிக்க ...வலியுறுத்து

இதேவேளை, வடகொரியா மீதான ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை அனைத்து தரப்புகளும் முழுமையாக, துல்லியமாக அமுல்படுத்தும் என சீனா எதிர்பார்க்கிறது.

பொருளாதார தடைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அரசியல் தீர்வை ஊக்குவித்தல் என்பன ஐ.நா. தீர்மானத்தின் தேவைகளாகும். எனவே, அதனை புறக்கணிக்க முடியாது.

தற்போதைய சூழ்நிலையில் அத்தடைகளை மீளப்பெற்று அரசியல் தீர்வு வழிமுறைக்கு ஆதர வளிப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபை பரிசீலிக்கும் என சீனா நம்புகிறது. இதுவே, சீனாவின் ஸ்திரமான நிலைப்பாடு" எனத் தெரிவித்தார். (7)

## மோடிக்கு சியோல் அமைதி விருது வழங்கி கௌரவித்த தென்கொரியா




(சியோல்)

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு, தென் கொரியாவின் உயரிய விருதான சியோல் அமைதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்திய மற்றும் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியதற்காகவும், பல்வேறு நடவடிக்கைகள் மூலம் உலக அமைதிக்குப் பங்களிப்பை வழங்கியமைக்காகவும், பிரதமர் நரேந்திர மோடிக்கு, தென் கொரிய நாட்டின் உயரிய விருதான சியோல் அமைதி விருது அண்மையில் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போது இரண்டு நாட்கள் சுற்றுப்பயணமாக தென் கொரியா சென்றுள்ள பிரதமர் மோடிக்கு நேற்று சியோல் அமைதி விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மோடியின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகள் அடங்கிய குறும்படமும் திரையிடப்பட்டது.

விருதைப் பெற்ற பின்பு பேசிய பிரதமர் மோடி, இந்த விருது தனிப்பட்ட முறையில் தனக்காக வழங்கப்பட்டது இல்லை என்றும், 130 கோடி இந்தியர்களை இந்த விருது சாரும் என்றும் தெரிவித்தார். (7)

## பிரேசில் எல்லையையும் மூடுவதற்கு தீர்மானம்

### மதுரோ அறிவிப்பு

(பிரேசிலியா) .

சர்வதேச மனிதாபிமான உதவிகளை தடுக்கும் முயற்சியாக பிரேசிலுடனான எல்லையையும் மூடுவதற்கு வெனிசுவெலா தீர்மானித்துள்ளது.

அதன்படி, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு முதல் பிரேசில் எல்லையை மூடுவதாக ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அறிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச நிவாரணங்களை நாட்டுக்குள் அனுமதிக்கும் எதிர்க்கட்சியின் முயற்சியை நிறுத்துவதற்கு கொலம்பியாவுடனான எல்லையை மூடுவது தொடர்பாகவும் கருத்திற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டிற்குள் எவ்வித நெருக்கடி நிலைமைகளும் இல்லை என மறுத்துள்ள ஜனாதிபதி, இந்நிவாரண விநியோக செயற்பாடு அமெரிக்காவின் திட்டமிட்ட ஆட்சிக்கவிழ்ப்பு சதியென்றும் விமர்சித்துள்ளார்.

இந்நிலையில், நாட்டில் நிலவும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களின் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் சர்வதேச நிவாரணங்கள் நாளை நாட்டை வந்தடையும் என எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோ நேற்றுமுன்தினம் உறுதியாக தெரிவித்தார்.

கரீபியன் தீவுகளுடனான கடல் எல்லையை மூடவுள்ளதாக வெனிசுவெலா ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், தற்போது இந்த புதிய அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

வெனிசுவெலாவில் கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது, பாரிய மோசடிகள் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து தேர்தலை புறக்கணித்தமையால், அங்கு 46.1 வீத வாக்குகள் மட்டுமே பதிவானது.

இதனால், ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய நிக்கோலஸ் மதுரோ 58 இலட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

எனினும், இவரது வெற்றியை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி, நிக்கோலஸ் மதுரோவை பதவி விலக வலியுறுத்தியும், புதிய தேர்தலை நடத்தக் கோரியும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தது. இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோ தன்னை இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டுள்ளார். இதற்கு உலக நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# அரசியலமைப்புச் சபையில் சுயாதீனத் தன்மை இல்லை

## மகிந்த குற்றச்சாட்டு


(கொழும்பு)

அரசியலமைப்புச் சபையில் எந்தவித சுயாதீனத் தன்மையும் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நெலும் மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சபை மாற்றப்பட வேண்டும். இந்த அரசியலமைப்பு சபையில் எந்தவித சுயாதீனத் தன்மையும் இல்லை.

அந்தச் சபையில் பிரதமர், பிரதமரின் பிரதிநிதி மற்றும் ஜனாதிபதி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.



எனவே அந்தச் சபை எவ்வாறு பக்கச்சார்பின்றி செயற்படும் என மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை; பிள்ளையானுக்கு மீண்டும் விளக்கமறியல்

(ஏறாவூர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை வழக்கு தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீண்டும் மே மாதம் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை. எம்.இர்ஸடீன் முன்னிலையில் நேற்று முன்தினம் இது தொடர்பான வழக்கு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கொலை வழக்கு தொடர்பாக குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது சுயமாக வழங்கப்பட்டதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பான கட்டளை வாக்கு மூல விசாரணை கடந்த 09.01.2019 ஆம் திகதி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று குற்ற வாக்குமூலம் சுயமாக வழங்கப்பட்டதாக தீர்மானிக்கப்பட்ட நிலையில் வழக்கு நேற்று முன்தினம் முதல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம், பதினாறாம் சாட்சியங்கள் அழைப்பாணையின் அடிப்படையில் மேல் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதனடிப்படையில் 16 ஆவது சாட்சியான முன்னாள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.அப்துல்லா மன்றில் ஆஜராகி விளக்கமளித்தார்.

ஏனைய சாட்சியங்களின் விளக்கங்களைப் பெறுவதற்காக எதிர்வரும் மே மாதம் 2 ஆம் மற்றும் 3 ஆம் திகதிகளுக்கு வழக்கினை ஒத்தி வைப்பதாக மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம்.இர்ஸடீன் அறிவித்துள்ளார்.

இதில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அரச சட்டத்தரணி மாதவ தென்னக்கோன், அரச சட்டத்தரணி இராஜரட்ணம் நிசாந்த் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் வைத்து ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை யாத்திரிகர்களை நாடு கடத்திய இஸ்ரேல்

(கொழும்பு)

இஸ்ரேல் நாட்டுக்குச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள் சிலர் அங்கிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குறித்த இலங்கை யாத்திரிகர்கள் ஜெருசலேம், நாசரேன் உள்ளிட்ட பல பகுதிகளைப் பார்வையிடச் சென்ற கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களென்றும் இவர்கள் தொடர்பில் அந்நாட்டு புலனாய்வுத் துறையினர் வழங்கிய தகவலுக்கமையவே இவர்கள் நாடுகடத்தப்பட்டுள்ளரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் குடிவரவு- குடியகல்வு சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகளுக்கமைய இவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் குறித்த யாத்திரிகர்கள் சட்டரீதியாகவே இஸ்ரேலுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தனரெனவும் இந்த விடயம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு- குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இலங்கை யாத்திரிகர்கள் கடந்த 20 ஆம் திகதி மாலை 6.45 மணியளவில் இந்தியாவின் டில்லி விமான நிலையத்திலிருந்து இந்திய விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஏ.ஐ- 282 விமானம் மூலம் 43 பேரும், நேற்று முன்தினம் அதிகாலை ஏ.ஐ- 283 விமானம் மூலம் 10 பேரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அத்துடன் மேலும் 18 யாத்திரிகர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவர் என இஸ்ரேல் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்கள் குளியாப்பிட்டிய, வென்னப்புவ, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென்றும் தெரிய வருகின்றது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஜலதோஷம்

ஒரு கல்யாண ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. பெண், மாப்பிள்ளைக்கு ஜாதகப் பொருத்தம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்!

பெண்ணுக்குச் செவ்வாய்த்தோஷம்...

மாப்பிள்ளை எப்படி?... என்றார் பெண் வீட்டுக்காரர்.

மாப்பிள்ளைக்கு இப்ப இருக்கின்ற ஒரே தோஷம் ஜலதோஷம் தான்! அப்படி என்றார் மாப்பிள்ளை வீட்டுக்காரர்.

''என்னங்க இப்படிச் சொல்கின்றீர்கள்? மாப்பிள்ளை பெரிய டாக்டராச்சே! அவருக்குமா ஜலதோஷம்? என்றார் இன்னொருவர்!

ஜலதோஷம் என்னங்க...ஆளைப் பார்த்துக்கொண்டா வருகின்றது? அது பாட்டுக்கு வந்துவிடுகிறது...! இவர் டாக்டர்...அதனாலே இவரிடம் நாம போகக் கூடாது என்று ஜலதோஷம் நினைப்பது இல்லை. அதிகமாக நோயாளிகளுக்கருகில் நின்று பார்ப்பதனால் அவருக்குத்தான் அடிக்கடி வருகின்றது.

இந்த ஜலதோஷத்திற்குக் காரணம் ரினோ என்ற வைரஸ்!

1950 இற்குப் பிறகு தான் இந்த ரினோ வைரஸை தனியாகப் பிரித்து எடுக்க முடிந்து விட்டதாம்! அதற்குப் பிறகு இந்த வைரஸோட இரகசியங்களைக் கண்டு பிடிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள்...நிறையப் பணம் எல்லாம் செலவு செய்திருக்கிறார்கள்.

இதனுடைய எடை , நீளம், அகலம் இதையெல்லாம் கண்டுபிடித்து விட்டார்கள்!

இதனுடைய உறுப்புக்களை அக்குவேறாகப் பிரித்துவிட்டு மறுபடியும் கோர்த்து விடுவதற்குக் கூட கற்றுக் கொண்டார்கள்!

ரினோ வைரஸின் மேலுறை 130 செல்சியஸ் டிகிரி சூட்டையும் புவியீர்ப்பு அழுத்தத்தைப் போல் 10,000 மடங்கு அதிகமான அழுத்தத்தையும் தாங்கக் கூடியது என்றும் கண்டுபிடித்து விட்டார்கள்!

ஆனாலும் எது முக்கியமோ அதை இன்னும் கண்டு பிடித்தபாடில்லை! மருந்து தான்! ரினோ வைரஸ் இருக்கின்றதே! இதிலே நூற்றுக்கு மேற்பட்ட ரகங்கள் இருக்குதாம்! இதனால் இவ்வளவு ரகம் எதற்காக? இது எல்லாம் எப்படி உண்டாகிவிட்டது? என்பது தெரியவில்லை! இவ்வளவு ரகங்கள் இருக்கிறதனாலே ஜலதோஷத்திற்கென்று ஒரு வாக்சீனை உருவாக்க முடியவில்லை! ஒவ்வொரு ரகத்திற்கும் ஒரு வாக்சீனை உருவாக்கி எல்லாவற்றையும் கலந்து பொதுவாக ஒரு கலவை வாக்சீனை உருவாக்க வேண்டும்!

ஜலதோஷம் எப்படி பரவுகின்றது என்பதை கண்டு பிடிக்கின்றதனாலே தான் இப்போதைக்கு மருத்துவர்கள் அக்கறை காட்டி வருகின்றார்கள்! ஜலதோஷம் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு சுலபமா தொற்றும். நெருக்கமா பழகுவது, ஜலதோஷம் பிடித்தவர்கள் பொருளை மற்றவர்கள் பயன்படுத்துவது இதுவெல்லாம் அது பரவுவதற்கு மிகவும் உதவி! பொதுவாகவே சில குறிப்பிட்ட உடல் கோளாறு உள்ளவங்களுக்குத்தான் அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கின்றது.

யூஸ்டேசியன் குழல்கள் (eustachian tubes) அடைபட்டிருக்கிறது. சைனஸ் கோளாறு வாயைத் திறந்துகொண்டே தூங்குவது – இது எல்லாம் ஜலதோஷத்திற்கு மிகவும் சாதகம்!

வாயைத் திறந்துகொண்டு தூங்குகிறபோது சவ்வுப் பரப்புகள் உலர்ந்து போய் விடுகின்றது. இது வைரஸ் வளர்வதற்கு மிகவும் சௌகரியமாகப் போய்விடுகின்றது!

ஜலதோஷத்தைப் பற்றி இதுவரைக்கும் பல பேர் வைத்திருக்கின்ற அபிப்பிராயத்தையெல்லாம் இனிமேல் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டியதுதான். ஏன் தெரியுமா? இப்பொழுது நான் சொல்லப் போவது எல்லாம் நிபுணர்கள் சொல்லியிருக்கின்ற விடயங்கள், குளிர் காலத்திலே நடமாடுவதற்கும் ஜலதோஷம் வருவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை! விற்றமின் சி இருக்கே இது ஜலதோஷத்தை தடுக்கவோ குணப்படுத்தவோ செய்யாது! கிருமிக் கொல்லிகள் சாதாரண ஜலதோஷத்தை தீர்க்காது. அஸ்பிரின், பரசிற்றமோல் இது சம்பந்தப்பட்ட மாத்திரைகள் எல்லாம் ஜலதோஷத்தினாலே ஏற்படுகின்ற தலைவலியையும் வேதனையையும் தணிக்குதே தவிர ஜலதோஷத்தை நிறுத்தி விடாது.

நிறையத் திரவங்களை பருகினால் தொண்டை வரட்சி குறையும். ஆனால் ஜலதோஷம் போகாது. ஜலதோஷத்தினாலே உடம்பு வலு குறைந்துவிட்டது மதிரி தோன்றும்! இது வெறும் மனப்பிரமைதான்! முடிந்தால் ஓய்வாகப் படுத்திருக்கிறது நல்லதுதான். ஆனால் அதனால் ஜலதோஷம் போய்விட்டது! பின்னர் இதற்கு என்னதான் செய்வது? அதுதான் ஒருத்தருக்கும் தெரியவில்லை!

வைரஸ் படையெடுப்பு ஆரம்பித்ததிலேயிருந்து 96 மணி நேரம் கழித்து ஒரு அதிசயம் நடக்கின்றது! என்ன தெரியுமா? ரினோ வைரஸ் புதிதாக செல்களை தாக்குவதை நிறுத்திக் கொள்கின்றது! உடல் திரவங்கள் பெருகி செல்களின் வைரஸ்களையும் கழுவி வெளியேற்றி விடுகின்றது! அதுசரி! இந்த வைரஸ் ஏன் இப்படி திடீர் என்று தன்னுடைய தாக்குதலை நிறுத்திக் கொள்கின்றது?

அதுவும் ஒரு பெரிய புதிராவே இருந்து கொண்டிருக்கின்றது!

ஜலதோஷம் வாரக் கணக்கிலே இல்லை என்றால் மாதக் கணக்கிலே ஏன் தொடர்ந்து நீடிக்கிறதில்லை? இதுவும் யாருக்கும் தெரியவில்லை!

அதுதான் ஒருவர் சொன்னார், ஜலதோஷத்திற்கு மருந்து கொடுக்கவில்லை என்றால் 96 மணி நேரத்திலே சௌகரியமாகும்! மருந்து கொடுத்தால் 4 நாட்களில் சௌகரியமாயிடும் என்றார்.

அப்படி என்றால் என்ன அர்த்தம்?

இரண்டும் ஒன்றும் தான்! உங்களிடம் யாராவது வந்து ஜலதோஷத்திற்கு ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்கள் என்று கேட்டால் 4 நாள் கழித்து வாங்க தருகின்றேன் என்று தாராளமாக சொல்லிவிடுங்கள். 4 நாள் கழித்து அவர் உங்களிடம் வரமாட்டார்! ஏனென்றால் 4 நாளிலே ஜலதோஷமே அவருக்கு டாட்டா காட்டிவிட்டு போயிருக்கும்!

# அரசாங்க வேலைவாய்ப்பைப் பெற தமிழ், சிங்கள மொழிகள் அவசியம்

## அமைச்சர் மனோ வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்காலத்தில் அரசாங்க வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளும் அவசியமென அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு அதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மொ்ழியை கற்போம் மனதை வெல்வோம்வேலைத்திட்டத்தின் கீழ், மோதர பாடசாலைகளை மையப்படுத்திய மொழிக்கற்கை பயிற்சி, தேசிய மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை வட கொழும்பு இளைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், சிங்கள மாணவர்கள்தமிழ்மொழியை கட்டாயமாக கற்க வேண்டும். அத்தோடு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழி உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த காலத்தில் நாட்டில் அரச பயங்கரவாதம் காணப்பட்டது என்றும், இன்று அந் நிலை மாறி சுமுக சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மனோ சுட்டிக்காட்டினார். (இ-7)

# தென்னை செய்கை மானியத்திட்டங்கள் உரியமுறையில் கிடைக்க நடவடிக்கை

## பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தென்னை மானியத் திட்டங்கள் உரிய முறையில் கிடைப்பதற்கு கற்பகதரு சங்கங்களினூடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தென்னைச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

தென்னைச் செய்கை சபையும் சங்கானை தெற்கு கற்பகதரு சங்கமும் இணைந்து தென்னை செய்கை தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வு நேற்று சங்கானை தெற்கு மாவடி ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வளவாளர்களாக பண்ணைத்திட்டமிடல் அலுவலர் ஈ.நற்குணன், சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜெ.சத்திஜேந்திரன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு தென்னை செய்கை செயற்றிட்டங்கள் தொடர்பான தென்னை நடுகை முறை மற்றும் பராமரிப்பு, நோய்கள் மற்றும் பீடைத் தாக்கங்கள், மண்ணீர்ப்பாதுகாப்பு, நோய்க்கான தீர்வுகள், தென்னை அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்கள், வீடியோ தொகுப்புக்கள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது தென்னைச் செய்கையாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

குறிப்பாக சங்கானை தெற்குபிரதேசமக்கள்தென்னை மானியங்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும்மைற்றா பீடைத்தாக்கம் தொடர்பாக பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இதற்கு பதிலளித்த பிராந்தியமுகாமையாளர், மானியத்திட்டங்கள் உரிய முறையில் கிடைப்பதற்கு கற்பகதரு சங்கங்களினூடாக உரிய நடவடிக்கைகளை நாம் எடுப்பதாகவும் மேலும் மைற்றா பீடைத்தாக்கம் தொடர்பாக தாம் குழுக்களை அமைத்து பாதிக்கப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு பீடைகட்டுப்பாட்டு முறைகளை செய்து தருவதாகவும் தெரிவித்தார். (இ-9)

## நாடாளுமன்றத்தில் மோதல்

# விசாரணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற மோதல் நிலைமை குறித்து விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை அதன் தலைவரான பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி நேற்று சபையில் முன்வைத்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம், 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் மோதல் நிலைமை ஏற்பட்டது.

இந்நிலையில், குறித்த விசாரணை அறிக்கையில், அந்த மோதல் நிலைமைக்கு தலைமைத்துவம் வழங்கிய சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் தெரிவித்தார். குறித்த விடயம்தொடர்பில் பொலிஸாரின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், எதிர்காலத்தில் இதுபோன்ற நிலைமை ஏற்படாதவாறு குறித்த அறிக்கையை நாடாளுமன்ற ஒழுங்கு விதிகள் மற்றும் சிறப்புரிமை குழுவுக்கு அனுப்பி, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைய சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணை நடத்தப்படுவது பொறுத்தமற்றது எனக்குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை பொலிஸாருக்கு கையளிப்பது நல்லதல்ல என்பதே தமது கருத்தாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, கருத்துத் தெரிவித்த சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, நாட்டின் சட்டமே அனைத்திற்கும் உயர்வானது என்றும் அதனை நாடாளுமன்ற சிறப்புரிமையின் கீழ் கொண்டுவர முடியாது என்றும் தெரிவித்தார்.

சபைக்குள் எதாவது குற்றம் இடம்பெற்றது அல்லது எவராவது உயிரிழந்திருந்தால் சிறப்புரிமை என்று கூறமுடியுமா? என்றும் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து, கருத்து தெரிவித்த சபாநாயகர் கரு ஜெயசூரிய, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை குறித்தும் உயிரிழப்பு எதுவும் ஏற்பட்டிருந்தால் அது குறித்தும் தாம் தலையிட முடியாது எனத் தெரிவித்தார்.

இதனை பிரதரும் ஏற்றுக்கொண்டார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸாரால் விசாரணை முன்னெடுக்கப்படுமாயின் அதில் தம்மால் தலையிட முடியாது என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (இ-7)

# போதைக்கு அடிமையான அமைச்சர்கள் பெயர் விபரங்கள் விசாரணைப் பிரிவிடம்

(கொழும்பு)

போதைப்பொருள் பயன்படுத்தும் அமைச்சர்கள் மற்றும்நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் குற்றவியல் விசாரணை பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குறித்த பெயர் விபரங்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை கையளித்துள்ளார்.

இதேவேளை நாடாளுமன்றில் இது குறித்து வினவப்பட்ட போது, குறித்த பெயர் விபரத்தை இன்னும்



ரஞ்சன் ராமநாயக்க சமர்ப்பிக்கவில்லை என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்திருந்தார்.

போதைப்பொருள் பயன்படுத்தும் அமைச்சர்கள் மற்றும்நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில், ஐக்கிய தேசியக் கட்சி குழுவொன்றையும் நியமித்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மனித வளத்தை வலுப்படுத்தும் உறுதிப்பாட்டுடன் அரசாங்கம் செயற்படுகிறது - அகிலவிராஜ்

(கொழும்பு)

மனித வளத்தை வலுப்படுத்தும் பொறுப்புக் கருதி அரசாங்கம் செயற்படுகிறது என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தரம் 13 வரை உறுதிப்படுத்தப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் நாட்டின் பாடசாலை கட்டமைப்பிற்கு உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மனித வளத்தை வலுப்படுத்துவது பொறுப்பாக கருதி அரசாங்கம் செயற்படுகிறது என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.



கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு 26 பாடங்களின் கீழ் உயர்கல்வியை தொடரும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு மாணவர்களை உருவாக்குவது இதன் இலக்காகும். நாடளாவிய ரீதியில் 850 பாடசாலைகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிவன் ஆலயத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்ட இலங்கையின் தொன்மைமிக்க வரலாறு





(பொலநறுவை)

பொலநறுவை வரலாற்று சிறப்புமிக்க சிவன் ஆலயத்திலிருந்து இலங்கையின் வரலாற்றுச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் பகுதியொன்றை மீளப் புனரமைப்பதற்காக உடைக்கும் போது உலோக பெட்டகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் அடிப் பகுதியில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றும் வேறு சில கட்டடங்களின் பாகங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சான்றுகளின் கண்டுபிடிப்பு தொடர்பில் மத்திய கலாசார நிலையத்தின் பொலநறுவை அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் ஆலயத்தின் சுவர் பகுதி உடைந்துள்ளது. அதனைச் சரிசெய்யும் நோக்கில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



கண்டுபிடிக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரங்களில் நீலம் மற்றும் சிவப்பு நிறத்திலான நிறப்பூச்சு பூசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


பாரம்பரியமிக்க இந்தக் கட்டடங்கள் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம் என தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்களின் மூலம் இலங்கையின் பல்வேறு வரலாறுகளைக் கண்டுபிடிக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை

11

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




### கோவில் பற்றுக்களும் கிராமங்களும்

(1) உடுப்பிட்டி கோவில் பற்று (2 கிராமங்கள்):- உடுப்பிட்டி மற்றும் கரணவாய்


(2) பருத்தித்துறை கோவில் பற்று (3 கிராமங்கள்):- புலோலி, தும்பளை மற்றும் வறாத்துப் பளை

(3) கட்டவேலி கோவில் பற்று (4 கிராமங்கள்):- கரவெட்டி, அல்வாய், துன்னாலை மற்றும் வல்லிபுரம்




தென்மராட்சி மாகாணம்
கோவில் பற்றுக்கள்-5,கிராமங்கள் - 26

ஒல்லாந்தர் மொத்தமாக 27 கிராமங்களை இந்நான்கு கோவில் பற்றுகளுக்குள் அடையாளப்படுத்தியிருந்தார்கள். இக் கிராமங்ளில் பல கீழே காட்டப்பட்டுள்ள இட விளக்கப்படத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.



பச்சிலைப்பள்ளி மாகாணம்
கோவில் பற்றுக்கள்-4, கிராமங்கள் - 27




வடமராட்சி மாகாணம்
கோவில் பற்றுக்கள்-3, கிராமங்கள் - 9

### தென்மராட்சி மாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

தென்மராட்சி மாகாணம் 5 கோவில் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன,

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர் |
|---|---|
| நாவற்குழி | Nawakoellie |
| சாவகச்சேரி | Chawagacheri |
| வரணி | Waranie |
| கச்சாய் | Chatchay |
| எழுதுமட்டுவாழ் | Eloedomatoewael |

ஒல்லாந்தர் மொத்தமாக 26 கிராமங்களை இவ் 5 கோவில் பற்றுகளுக்குள் அடையாளப்படுத்தியிருந்தார்கள். இக் கிராமங்களில் பல கீழே காட்டப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

### கோவில் பற்றுக் களும் கிராமங்களும்

(1) நாவற்குழி கோவில் பற்று (3 கிராமங்கள்):- நாவற்குழி, நுணாவில் மற்றும் கோவிலாக்கண்டி

(2) சாவகச்சேரி கோவில் பற்று (5 கிராமங்கள்):- சாவகச்சேரி, மட்டுவில், சரசாலை, தனங்கிளப்பு மற்றும் மீசாலை

(3) வரணி கோவில் பற்று (5 கிராமங்கள்):- வரணி, மந்துவில்,குடமியன், தாவளை இயற்றாலை மற்றும் வரணி இயற்றாலை.

(4) கச்சாய் கோவில் பற்று (8 கிராமங்கள்):- கச்சாய், பாலாவி, கெற்பெலி, அல்லாரை, உசன்,கொடிகாமம், வெள்ளம்போக்கடி மற்றும் ஒரு கிராமம்.

(5) எழுதுமட்டுவாழ் கோவில் பற்று (5 கிராமங்கள்):- எழுதுமட்டுவாழ், நாகர்கோவில், மிருசுவில், அம்பன் மற்றும் கரம்பகம்,

### பச்சிலைப்பள்ளி மாகாணத்திலிருந்த கோவில் பற்றுக்கள்

பச்சிலைப்பள்ளி மாகாணம் 4 கோவில் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன:

| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சுமொழியில் பெயர் |
|---|---|
| முகமாலை | Mogomale |
| புலோப்பளை | Ploopalle |
| தம்பகாமம் | Tambagamo |
| முள்ளிப்பற்று | Moelepattoe |

### கோவில் பற்றுக் களும் கிராமங்களும்

(1) முகமாலை கோவில் பற்று (4 கிராமங்கள்):- முகமாலை, கிளாலி, வேம்பொடுகேணி மற்றும் ஒரு கிராமம்.

(2) புலோப்பளை கோவில் பற்று (4 கிராமங்கள்):- புலோப்பளை, சோரன்பற்று, பெரியபளை மற்றும் தர்மக்கேணி

(3) தம்பகாமம் கோவில் பற்று (5 கிராமங்கள்):- தம்பகாமம், மாசார், இத்தாவில், செம்பியன்பற்று மற்றும் வண்ணான்கேணி

(4) முள்ளிப்பற்று கோவில் பற்று (14 கிராமங்கள்):- பெரிய பச்சிலைப்பள்ளி, கோயில்வயல், முகாவில், முள்ளியான், சங்கரத் தார்வயல், போக்கருப்பு, ஆழியவளை, மருதங்கேணி, உடுத்துறை, ஊரியான்பற்று, இயக்கச்சி, இறவிக்குளம் மற்றும் இரு கிராமங்கள்.

இப்படங்கள் எல்லாம் தேசப்படப் புத்தகமாக டச்சு அரசாங்கத்தினால் 2008ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

### கலாசார மாற்றம்

டச்சுக்காரர், போர்த்துகீசர், ஆங்கிலேயர் போன்ற அந்நியர்களின் ஆக்கிரமிப்புகளினாலும் ஆட்சியினாலும், அரசியலில் மட்டும் அல்ல, சமுதாயத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அதனால் தமிழர்களின் பண்பாட்டில் பல மாறுதல்கள் தோன்றின. ஆடை அணிதல், ஒப்பனை செய்தல், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயக்கோட்பாடுகள் முதலியவற்றில் பல மாறுதல்கள் தோன்றியுள்ளன. கல்லும் சுண்ணாம்பும் பயன்படுத்தி ஓட்டால் வேயப்படும் கட்டட மரபு ஒல்லாந்தர் காலத்திலிருந்தே யாழ்ப்பாணத்தில் வழக்கிற்கு வந்ததென்று கூறுவர். யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய கால வீடுகளைப் பார்த்தால் டச்சுக்காரரின் சிறப்ப முறையைக் காணலாம். வீடுகளில் ஒரு "ஸ்தோப்பு" அல்லது விறாந்தையிருப்பது, விறாந்தையிலிருந்து "நடைகூடம்" அல்லது மண்டபத்துக்கு போகலாம். நடைகூடத்துக்கு அணித்தாக வீட்டில் உள்ளார் வசிக்கும் அறைகள் இருப்பது இவையெல்லாம் டச்சுக்காரர் கலாசாமென்றே கூறப்படுகின்றன.

அந்நிய மொழி ஊடுருவலை கருதினால் தமிழில் போர்த்துக்கீச மொழிச் சொற்கள் அதிகம் ஊடுருவவில்லை என்றாலும் சில சொற்கள் யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் இருந்துதான் வருகின்றன.

அவற்றுள் சில: அலுமாரி, அன்னாசி, ஆசுப்பத்திரி, கடுதாசி, கதிரை, குசினி, கோப்பை, சப்பாத்து, தாச்சி, துவாய், நத்தார், பாண், பீங்கான், பீப்பா, பேனை வாங்கு, விசுக் கோத்து, விறாந்தை அலவாங்கு, அலுகோசு, பைலா, சாவி, சன்னல், களுசான், கொய்யாப்பழம், தவறணை என்பனவாகும்.


(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

178


உ

கணபதிதுணை.

பொன்பற்றிகாவலன்

புத்தமித்திரனார்

இயற்றிய

வீரசோழியம்.

இஃது

யாழ்ப்பாணம்

வை. தாமோதரம்பிள்ளையால்

பெருந்தேவனாருரையோடு

பலதேசப்பிரதிருபங்களைக்கொண்டு

27 FEB 1912

“ சொந்தப் பணத்தையும் நலன்விரும்பிகள் வழங்கிய நன் கொடைகளையும் பயன்படுத்தி மறுபதிப்புக்களை அச்சிட்டார். அவற்றினுள் அதிகம் பெறுமதிவாய்ந்ததை தொல்காப்பியம் இலக்கண விளக்கம், வீரசோழியம், கலித்தொகை, சூளாமணி, நீதி விளக்கம், தணிகைப்புராணம், இறையனார் கைப்பொருள் என்பனவாகும்.இந்தக் கையெழுத்துப் பிரதிகளையெல்லாம் அச்சிட்ட பதிப்புக்களாக்குவதற்குத் தாமேர்தரம்பிள்ளை எத்தனை சிரத்தை யுடன் செயற்பட்டார் என்பது தெளிவாகும் ”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

ஏடு எடுக்கும்போது ஓரம் சொரிகின்றது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகின்றது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாகப் பறக்கின்றது. இனி எழுத்துக்களோவென்றால் வாலும் தலையுமின்றி நாலு புறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கிறது.

சிறப்பிலக்கிய, பாரம்பரிய தமிழ்க் கையெழுத்துப் பிரதிகளைப் பேணிப்பாதுகாப்பதில் தாமோதரம்பிள்ளை காட்டிய அக்கறையையும் அவரது மேற்படி கூற்று தெரிவிக்கின்றது. அவை மீட்டெடுக்க முடியாமல் போவதற்கு முன்னர் அவற்றைப் பாதுகாக்கவேண்டியது மிக அவசரமாகச் செய்யப்பட வேண்டியதொன்று என அவர் குரல் கொடுத்தார்.

கனவான்களே இந்த ஏட்டுப் பிரதிகள் அழிந்து போகின்றனவே என்ற கவலை உங்களுக்கு இல்லையா? தமிழ் உங்கள் அன்னை என்பதை நீங்கள் உணரவில்லையா? உங்கள் அன்னைக்கு உதவும் வகையில் நீங்கள் எதையும் செய்கின்றீர்கள் இல்லை. தேசாபிமானம், மதாபிமானம், மொழியபிமானம் என்பன உங்களுக்கு இல்லையென்பதில் பெருமை கொள்கின்றீர்களா? தயவு செய்து இவ்விடயத்தையிட்டு சிரத்தையுடன் சிந்தியுங்கள்.

தமிழர் தேசிய கலாசார உணர்வை மீளப்பெற அவர்களைத் தூண்டுவதிலும் ஊக்குவிப்பதிலும் தாமோதரம்பிள்ளை ஒரு கருவியாகச் செயற்பட்டார். அவருக்கு ஏட்டுப் பிரதிகளைக் கொடுத்தும் நிதியுதவி செய்தும் அவரது இலக்குகள் ஈடேற தமிழ்மக்கள் ஆதரவளித்தனர்.

அவர் தனது சொந்தப் பணத்தையும் நலன்விரும்பிகள் வழங்கிய நன்கொடைகளையும் பயன்படுத்தி மறுபதிப்புக்களை அச்சிட்டார். அவற்றினுள் அதிகம் பெறுமதிவாய்ந்ததை தொல்காப்பியம் இலக்கண விளக்கம், வீரசோழியம், கலித்தொகை, சூளாமணி, நீதி விளக்கம், தணிகைப்புராணம், இறையனார் அகப்பொருள் என்பன வாகும்.

இந்தக் கையெழுத்துப் பிரதிகளையெல்லாம் அச்சிட்ட பதிப்புக்களாக்குவதற்குத் தாமோதரம்பிள்ளை எத்தனை சிரத்தையுடன் செயற்பட்டார் என்பது தெளிவாகும். ஏனைய பல அறிஞர்களான ரி.கனகசுந்தரம்பிள்ளை, குமாரசுவாமிப்புலவர், திருகோணமலை என்.கே. சதாசிவம்பிள்ளை, யாழ்ப்பாணத்துச் சின்னத்தம்பி உபாத்தியாயர், யாழ்ப்பாணம் வேலுப்பிள்ளை, நல்லூர் கைலாசபிள்ளை என்பவர்கள் இவரின் மாபெரும் பணி நிறைவேற உதவினர். இந்த அறிஞர்களின் ஆக்கங்களைச் சுருக்கமாக ஆய்வது பொருத்தமாகும்.

கனகசுந்தரம்பிள்ளை தமிழ் நாட்டில் வசித்து, தாமோதரம்பிள்ளையுடன் ஆசிரியராகப் பணியாற்றி, அவருடைய இலக்கிய முயற்சிகளில் பங்கெடுத்து கூடவே இருந்தார். அவர் தாமோதரம்பிள்ளையின் ஆக்கங்களைப் படித்து அவற்றின் வெளியீடு பற்றி ஆலோசனை நல்கியதோடு ஏனையோரது இலக்கிய முயற்சிகளுக்கும் இவர் தனது ஆதரவை அளித்தார்.

இவர்கள் உ.வே. சாமிநாத ஐயர் (தமிழ்நாடு), நாராயணசாமி அய்யங்கார் (தமிழ்நாடு), குமாரசுவாமிப்புலவர் (யாழ்ப்பாணம்) ஆகியோராகும். இவர்கள் தாம் வெளியிட்ட பல் வேறு நூல்களில் கனகசுந்தரம்பிள்ளைக்கு தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

தாமோதரம்பிள்ளையைப் போன்றே குமாரசுவாமிப்புலவரும் பல தமிழ் சிறப்பிலக்கியங்களை மறுபதிப்புச் செய்தார். இவரது ஆக்கங்கள் நான்மணிக்கடிகை, யாப்பருங்கலம், வெண்பாப்பட்டியல் என்பனவாகும்.

இதேபோன்று கணேசையர், காசிவாசி செந்திநாதஐயர், சாமிநாத ஐயர், வைத்திலிங்கம், முத்துத்தம்பிப்பிள்ளை, கைலாசபிள்ளை என்போரும் தமிழ் சிறப்பிலக்கியங்களை வெளியிடுவதில் பங்காற்றியுள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர்களில் சிலர் சொந்தமாக அச்சுக்கூடம் வைத்திருந்து தங்களது சொந்த இலக்கியப் படைப்புக்களை வெளியிட்டனர்.

சிவஞானசித்தியார், திருக்கோவையார் எனும் நூல்கள் கைலாசபிள்ளையினால் வெளியிடப்பட்டவை. காளிதாச சரிதம், இலங்கைச் சரித்திரச் சூக்கணம், யாழ்ப்பாண சரிதம் எனும் நூல்கள் முத்துத்தம்பிப்பிள்ளையினால் வெளியிடப்பட்டவை.

சபாபதி நாவலரும் பல படைப்புக்களை வெளியிட்டுள்ளார். இவற்றில் சின்னத்தம்பிப்புலவரின் பறாளை விநாயகர் பள்ளு என்பது மிகவும் குறிப்பிடக்கூடியதாகும். கதிரவேற்பிள்ளை கதிர்காமக் கலம்பகத்தையும் பொன்னம்பலப்பிள்ளை ரகுவம்சத்தையும் வெளியிட்டனர்.

நாவலரின் காலத்தில் உரைகளை எழுதுவதும் வெளியிடுவதும் முக்கியத்துவம் பெற்றன. சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் புராண மற்றும் பழம் இலக்கியச் செய்யுள்களையும் உரை நடையையும் மேலும் தர்க்க ரீதியாகவும் எளிமையாகவும் விளக்குவதில் உரைகள் முக்கியத்துவம் பெற்றன.,

இறையனார், இளம்பூரணார், கல்லாடனார், அடியார்க்கு நல்லார், தெய்வச்சிலையார், பேராசிரியர் நச்சினார்க்கினியார் என்பவர்கள் யாவருமே இத் துறையில் நாவலரின் முன்னோடிகளாக விளங்கினர்.

(தொடரும்)

# தபால் கட்டண அதிகரிப்பில் அரசியல் நோக்கம் இல்லை

## அமைச்சர் ஹலீம் விளக்கம்



(கொழும்பு)

தபால் சேவையினூடான மக்களின் சேவைகளை அதிகரிக்கும் பொருட்டே தபால் சேவைக் கட்டணங்களை இரட்டிப்பாக்கியதாக முஸ்லிம் சமய கலாசார மற்றும் தபால் துறை அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்

ஹிரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் கம்பரெலிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தபால் கட்டணத்தை அதிகரித்ததில் எவ்வித அரசியல் நோக்கங்களும் இல்லை.

அமைச்சரவையின் அனுமதியுடனே தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினருக்கு கடந்த காலங்களில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இது அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உறுப்பினருக்கு வழங்கப்பட்ட 24 ஆயிரம் ரூபா முத்திரைச் செலவுகள், இப்போது 48 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை இலக்காகக் கொண்டு வழங்கப்பட்ட சலுகைகள் இதுவென, மக்கள் விடுதலை முன்னணி, உறுப்பினர் ரில்வின் சில்வா கூறியிருந்தார். தேர்தலை இலக்காகக் கொண்டு செய்யும் விடயமல்ல இது.

பொதுவாக அரச கருமங்களுக்காக மட்டுமே இந்த முத்திரைகளைப் பயன்படுத்த முடியும். அவர்களின் தனிப்பட்ட வேலைகளுக்கு இந்த முத்திரையைப் பயன்படுத்த முடியாது.

கடந்த காலங்களில் தேசிய அரசாங்கத்தை அமைத்தே மக்களுக்கு சேவைகள் செய்தோம். துரதிஷ்டவசமாக தேசிய அரசாங்கம் இல்லாமற் போய் விட்டது.

தற்போது ஒரு அமைச்சரிடம் இரண்டுக்கும் மேற்பட்ட பல அமைச்சுக்கள் உள்ளன.

இவற்றை நிர்வகிப்பதில் பல சிரமங்களை அவர்கள் எதிர்நோக்கின்றனர்.

இந்த வேலைப்பளுக்களைக் குறைக்கவே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியிலுள்ள அக்குறணை, பூஜாப்பிட்டிய, ஹிரிஸ்பத்துவயிலுள்ள மதஸ்தலங்களுக்கு 3 கோடி ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது.

குளங்கள், பாடசாலைகள், வீதிகளைப் புனரமைக்கவும் மலசலகூடங்களை அமைப்பதற்கும் நிதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.(இ-7)

# ஜூலை மாதம் முதல் சபாரி வண்டிகளுக்கு அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அனைத்து உள்நாட்டு சபாரி ஜீப் வண்டிகளுக்கும் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதன்படி சபாரி வண்டி சாரதிகளை தெளிவூட்டும் 8 வேலைத்திட்டங்கள் ஒன்றிணைந்த சுற்றுச்சூழல் கூட்டமைப்பால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்பு ஆணைக்குழு இணைந்து முன்னெடுக்கின்ற வேலைத்திட்டத்திற்கு அமைய தெளிவூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் ஒரு வேலைத் திட்டம் அண்மையில் பொலநறுவை, மின்னேரியா தேசிய பூங்காவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஒன்றிணைந்த சுற்றுச்சூழல் கூட்டமைப்பின் தலைவர் ரொஹான் விஜேசிங்க,

இலங்கையில் சுற்றுலாத்துறையை நடத்திச் செல்லும் போது அதன் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த விடயத்தை மேற்கொண்டதாக கூறினார்.

மின்னேரியா, கவுடுல்ல மற்றும் இகோ பார்க் (Eco Park) ஆகிய இடங்களில் இயங்குகின்ற சபாரி சாரதிகள் இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கு நாட்டுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் வேண்டுகோளின்படி சுற்றுலாத்துறையில் வெவ்வேறு மாற்றங்களை செய்ய வேண்டி ஏற்படுவதாக ஒன்றிணைந்த சுற்றுச்சூழல் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதனூடாக இலங்கைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதே நோக்கமாகும்,

இதுவரை 8 வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவை அனைத்துமே இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மின்னேரியா, கவுடுல்ல மற்றும் இகோ பார்க் (Eco Park) ஆகிய இடங்களில் சுமார் 700 சபாரி சாரதிகள் இருப்பதுடன், அவர்களில் சுமார் 400 பேர் வரை இந்த செயற்றிட்டத்தில் பங்கெடுத்துள்ளனர்.

எதிர்காலத்தில் இந்த தொழிற்றுறையில் ஈடுபட எண்ணியுள்ள அனைவரும் இது தொடர்பில் தெளிவடைய வேண்டும் என்பதுடன், தமது தொழிலின் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதன் போது சபாரி சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)




**யாழ். நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1652

Search for people, places and things

### கீர்த்து



### யூகி

நீ வெற்றிக்காக போராடும்போது வீண் முயற்சி என்று சொல்பவர்கள் வெற்றிபெற்றபின் விடாமுயற்சி என்பார்கள்



### சிலம்பு

செல்போன் பயன்படுத்த ஆரம்பித்தபின் நிம்மதியாய் மழையில் நனையக்கூட முடிவதில்லை



### ரெஜி

அளவோடு பழகனும் எல்லைகள் தெரிந்திருக்கனும் என்பதெல்லாம் தெருவில் வீசப்பட்ட பின்னர்தான் அறிவுக்கு தெரியவரும்



### சரவணன்




### சிவாகினி

வெயில்ல ஊரைச் சுற்றிட்டு வந்து கண்ணாடியைப் பார்த்தா முகம் இப்படி இருக்கு. ஐயகோ!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோத்தபாயவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் இறுதி யுத்தத்தில் போர்க்குற்றங்கள்

## பொன்சேகா வெளிப்படுத்தல்



(கொழும்பு)

இறுதி யுத்தத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்ஷ, தான் தயாரித்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தியதாலேயே போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டு வருகின்றமை குறித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இறுதி யுத்தத்தில் இராணுவத்தின் பிரதான தளபதியாக நான் இருந்தேன்.

இதன்போது போரை விரைவாக முடிவுக்கு கொண்டு வருவதற்காக கோத்தபாய ராஜபக்ஷ நிகழ்ச்சி நிரலொன்றைத் தயாரித்தார்.

அதற்கு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கியிருந்தார்.

ஆனால், நான் எனது சுயபுத்தியில் செயற்பட்டே யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தேன்.

மேலும் யுத்தம் நிறைவடையும் நேரத்தில் கோத்தபாய, தனது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தியதால், சில குற்றங்கள் இடம்பெற்றதாக தகவல் கிடைக்கப்பெற்றது என சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'அநியாயமாகச் சிறையிலடைத்துவிட்டனர்' அமைச்சர்களிடம் ஞானசாரதேரர் புலம்பல்





(கொழும்பு)

சிறைத் தண்டனை அனுபவித்துவரும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைச் சந்தித்து சுகம் விசாரிக்கும் நோக்கில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மனோ கணேசன் மற்றும் ஆளுநர் அஸாத் சாலி ஆகியோர் நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது, செய்யாத குற்றச்சாட்டுக்களை இணைத்து, அவற்றை நீதிமன்றங்களில் நிரூபித்து தன்னை அநியாயமாகச் சிறையிலடைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஞானசார தேரர் அமைச்சர்கள் மற்றும் ஆளுநரிடம் தெரிவித்துள்ளதாகச் சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# குமார வெல்கமவிடம் அதி நவீன கார்

## இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முதல் சந்தர்ப்பம்








(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம **Aston martin DB 11 convertible** ரக காருக்குச் சொந்தக்காரர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த வகையான கார் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தக் காரைத் தயாரித்த நாட்டிலேயே கொள்வனவு செய்யும் போது அதன் பெறுமதி இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பெறுமதியில் சுங்க வரிகள் சேர்க்கப்படாமல் 4.5 கோடி ரூபாவாகும். வரிகள் சேர்க்கப்பட்டால் மேலும் பல கோடிகளைத் தாண்டும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இத்தனை கோடி ரூபாய் பெறுமதியில் கார் உள்ளமை தென்னிலங்கை அரசியல் மட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக குமார வெல்கம போட்டியிட கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## 2 கிலோ கஞ்சாவுடன் பெண் கைது



(கண்டி)

2 கிலோ கிராமுக்கும் அதிக பெறுமதியான கஞ்சாவை பயணப் பொதியில் மறைத்து வெளிநாடு செல்ல முயன்ற பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாய் நோக்கிப் பயணிக்க இருந்த நிலையில் அவரைப் பரிசோதனை செய்த போது கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சட்டவிரோத பணியாளர்கள் வெளியேற மன்னிப்பு காலம்

(கொழும்பு)

குடிவரவு-குடியகல்வு சட்டதிட்டத்தை மீறி சட்டவிரோதமாக ஜோர்தானில் தங்கியிருக்கும் பணியாளர்கள் அந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக ஜோர்தான் அரசாங்கத்தால் பொது மன்னிப்பு காலம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த மாதம் 5 ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வரை இந்தப் பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜோர்தானில் 3500 இலங்கைப் பணியாளர்கள் சட்டவிரோதமாகத் தங்கியிருப்பதாக அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## 'அல ரஞ்சி' கைது

(கொழும்பு)

டுபாயில் கைது செய்யப்பட்ட கெசெல்வத்த தினுகவின், மாமாவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அல ரஞ்சி என்றழைக்கப்படும் இவரை, ஹெரோயின் வைத்திருந்த குற்றத்துக்கு அமைவாகக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர், கெசெல்வத்த தினுகவின் மாமா என்று அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், இவர் கொழும்பு - குணசிங்கபுர பகுதியைச் சேர்ந்தவரெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 110 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 140 | 160 |
| தக்காளி | 50 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 70 | 40 |
| கோவா | 50 | 50 | 60 |
| கரட் | 120 | 100 | 80 |
| பூசணி | 40 | 20 | 40 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 120 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 75 |
| பாகற்காய் | 130 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 30 |
| பயற்றங்காய் | 120 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 |
| பீற்றூட் | 30 | 50 | 30 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 |
| போஞ்சி | 50 | [illegible] | 70 |
| கத்தரிதம்புள்ள | 80 | [illegible] | 50 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 30 |
| இராசவள்ளி | 160 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 40 | 60 | 60 |
| முள்ளங்கி | 50 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 15 |
| ஈரப்ப[illegible] | 60 | 40 | 100 |




# திட்டமிட்டு வேலை செய்தால்



துறையூர் என்னும் நாட்டை மகதவர்மன் என்னும் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான்.

அவனிடம் ஏராளமான படை வீரர்கள் இருந்தனர். அதற்காக மற்ற நாட்டுடன் போர் புரிய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், அந்த படை வீரர்களைக்கொண்டு உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்தினான். இதன்மூலம் நாட்டில் திருட்டு, கொள்ளை போன்ற குற்றங்கள் இல்லாமல் இருந்தன. அதேபோல் விவசாயம் செய்யும் நிலங்களை நன்செய், புன்செய் என பிரித்து அதற்கேற்றவாறு வசூல் செய்து அந்த வருவாய் மூலம் மற்ற காரியங்களுக்கு செலவுகள் செய்து நாட்டை வளமுடன் வைத்துக்கொண்டான்.

இவ்வாறு நல்ல முறையில் ஆட்சி செய்து கொண்டிருந்த மகதவர்மனுக்கு பெரிய சோதனை வந்தது, அந்த வருடம் நாட்டில் பெரும் பஞ்சம் தலைவிரித்தாடியது. மழையே பெய்யவில்லை. இதனால் பயிர்கள் கருகி விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் திண்டாடினர். மன்னனும் முடிந்தவரை சமாளித்து பார்த்தான். விவசாயம் நலிந்ததால் வரி கட்ட முடியாமல் விவசாயிகள் தடுமாறினர். வரி கட்டாததால் நாட்டில் பணப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் அனைவரும் மிகுந்த துன்பம் அடைந்தனர்.

அப்பொழுது ஒரு துறவி அந்த நாட்டுக்கு வந்தார். மகதவர்மன் உடனே அவரைப் பார்க்க வேண்டி அவர் தங்கியுள்ள குடிலுக்கு வந்தான். அங்கு துறவியின் சீடர்கள் துறவி தூங்குகிறார் என்றனர். மன்னன் நான் காத்திருக்கிறேன் என்று வாசலில் காத்திருந்தான்.

ஒரு மணி நேரத்தில் துறவி எழுந்து விட்டார். மன்னர் தங்களுக்காக வெளியே நீண்ட நேரமாக காத்திருக்கிறார் என சொல்லவும் துறவி மன்னனைக் காண அவரே வெளியே வந்து விட்டார். மன்னன் எழுந்து அவர் காலடியை வணங்கினான். மகதவர்மா இந்த நாட்டின் மன்னனான நீ எனக்காக ஏன் இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும். எழுப்பி விட உனக்கு அதிகாரம் இருந்தும் ஏன் எனக்காக இவ்வளவு நேரம் காத்திருந்தாய்?

முனிவரே! கற்றோருக்கும், வயதில் மூத்தோருக்கும், குருவுக்கும், உம்மைப்போன்ற துறவறம் கொண்டோருக்கும் பணிவுடன் நடந்து கொள்வது தான் மனிதகுல தர்மம். அதில் மன்னன் மட்டும் என்ன விதிவிலக்கா?

உன் பணிவும் பண்பும் என்னை வியப்படைய வைக்கின்றது, உனக்கு என்ன வேண்டும் கேள்? கேட்ட துறவியிடம் என் நாட்டில் மழை இல்லாமல் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் சொல்ல முடியாத அளவுக்கு துன்பப்படுகிறார்கள், இதற்கு நீங்கள் ஒரு வழி சொல்ல வேண்டும் என்று பணிவுடன் கேட்டான்.

துறவி சிறிது நேரம் கண்ணை மூடி அமர்ந்திருந்தார். மன்னா உன் நாட்டின் வரட்சியை என்னால் போக்க முடியும், குறுகியகாலத் திட்டம், நீண்ட காலத் திட்டம் என்ற இரண்டு முறைகள் உள்ளன. குறுகிய கால வழி என்பது என்னால் மந்திரங்கள் சொல்லப்பட்டு மழை பொழிய ஆரம்பிக்கும். வரட்சி நீங்கும், ஆனால் மறுபடியும் வரட்சி வரும், அப்பொழுது என்னைப்போல வேறு ஒரு துறவியிடம் நீ செல்ல வேண்டியிருக்கும். இது குறுகிய கால வழி, ஆனால் உடனடி பலனுண்டு. நீண்டகால வழி என்பது மந்திர தந்திரமல்ல, நான் சொல்லும் யோசனைகளை மட்டும் செய்தால் போதும், அது பலன் தர நாட்களாகலாம், அதன் பின் வரட்சி வந்தாலும் உன்னால் சமாளித்துக் கொள்ளலாம், என்ன சொல்கிறாய்?

சிறிது நேரம் யோசித்து நின்ற மகதவர்மன் ஐயா எனது நாட்டுக்கு நீண்ட காலத்திட்டம் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். ஏனெனில் எதிர் காலத்தில் இதுபோல் துன்பம் வந்தால் எனக்கு பிறகு வரும் மன்னனுக்கு மிகுந்த துன்பத்தை தரும்.

உன்னுடைய நல்ல எண்ணத்தை பாராட்டுகிறேன், உன்னால் இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த வரட்சியை சமாளிக்க முடியும்? முனிவரே இன்னும் ஐந்து ஆறு மாதங்கள் மட்டுமே இருப்பை வைத்து சமாளிக்க முடியும்.

கவலைப்படாதே, உன் நல்ல மனதுக்கு அவ்வளவு காலம் துன்பப்படமாட்டாய். அடுத்த மாதத்திலிருந்து நல்ல மழை பெய்ய வாய்ப்பிருக்கிறது. அதற்குள் உன் மக்களை தயார்படுத்துவது தான் இப்பொழுது முக்கியமான பணி. என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.

உன் நாட்டில் ஆற்று வெள்ளம் வரும் பாதை இருக்கிறதா? ஆம் அது காய்ந்து வரண்டு போய்க் கிடக்கிறது.

கவலைப்படாதே, முதலில் ஒரு கூட்டத்தை ஆற்றுப்பாதையை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும், அதன் கரையோரங்களில் மரக்கன்றுகளை நட்டு வைக்கச் சொல்.

அடுத்து ஒரு கூட்டத்தை ஆற்றிலிருந்து நான்கைந்து இடங்களில் கால்வாய் வெட்டி ஊருக்கு நடுவே குளம் எடுக்கச்செய், அதைச் சுற்றி கரையை உயரப்படுத்தி பலப்படுத்தச் செய். மூன்றாவது ஒரு கூட்டத்தை நாடு முழுவதும் மரக்கன்றுகளை நட்டு தண்ணீர் விட்டு பாதுகாத்து வைக்கச் சொல். அடுத்ததாக ஒவ்வொரு வீட்டிலிருந்து வெளியேறும் தண்ணீரை ஒரு குழியில் விடச்சொல். ஒவ்வொரு விவசாயியும் தன் விளை நிலத்தில் ஒரு குளம் போல் வெட்டி தண்ணீரை சேமித்து வைக்கச்சொல்.

இறுதியாக ஆற்றில் வெள்ளம் வருமுன் நான்கைந்து இடங்களில் தடுப்பணை போல கட்டி பெரும் வெள்ளம் வந்தாலும் வெளியேறிச் செல்லவும் வெள்ளம் வராத காலங்களில் தடுப்பணையில் தண்ணீர் தேங்கி நிற்கவும் ஏற்பாடுகள் செய்து விடு. இதன் பலனை ஒரு வருடத்தில் காண்பாய்.

மகதவர்மன் துறவியை வணங்கி விடை பெற்றான். துறவி சொன்ன வேலைகளை அவசர அறிவிப்பாக அறிவித்து நாட்டில் உள்ள அனைத்து படை வீரர்களுடன், குடிமக்களையும் இந்த செயலில் ஈடுபட வைத்தான். விவாசாயிகளும் வரட்சி காலமாக இருந்ததால் இந்த காரியங்களில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். அடுத்த ஒன்றரை மாதங்களுக்குள்ளாகவே நல்ல மழையை பார்த்த அந்த நாடு அதன் பின் பெருமளவு வெள்ளம் வந்தாலும் வடிகால் வழியாக வெளியேற்றி, எந்தளவுக்கு வரட்சி வந்தாலும் ஈரப்பதம் காயாமலும் நாட்டை பாதுகாத்து வளப்படுத்திக்கொண்டன.

# பழமொழியும் விளக்கமும்

- ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.

**பொருள்:**
மற்றவர்கள் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் உன் குழந்தை தானே வளர்ந்து விடும்.

**உண்மையான பொருள்:**
ஊரான் வீட்டு பிள்ளையாகிய உன் கர்ப்பிணி மனைவியை பாசத்துடன் ஊட்டி வளர்த்தால், அவள் வயற்றில் இருக்கும் உன் குழந்தையும் ஆரோக்கியமாகத் தானே வளரும் என்பதே உண்மையான பொருள்.

- கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை.

**பொருள்:**
கழுதைக்கு கற்பூர வாசம் தெரியாது.

**உண்மையான பொருள்:**
'கழு தைக்க தெரியுமாம் கற்பூர வாசனை'
கழு என்பது ஒரு வகை கோரைப்புல். அதில் பாய் தைத்து படுத்து பார்த்தால் கற்பூர வாசனை தெரியும் என்பதே சரியான விளக்கம்.

# முத்தந்தா



கண்ணே மணியே முத்தந் தா!
கட்டிக் கரும்பே முத்தந் தா!
வண்ணக் கிளியே முத்தந் தா!
வாசக் கொழுந்தே முத்தந் தா!

தேனே பாலே முத்தந் தா!
தெவிட்டாக் கனியே முத்தந் தா!
மானே மயிலே முத்தந் தா!
மடியில் வந்து முத்தந் தா!

வயிற்றைப்பற்றி மட்டுமே நினைப்பவன் தலையைப் பட்டினி போடுகிறான்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இனிமேலாவது தமிழ் மக்கள் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும்

தமிழர்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொள்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலத்த ஏமாற்றத்தை அடைந்து விட்டது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறை பொருத்தமற்றது எனத் தமிழ் மக்கள் கருத்துரைத்தும் அதனை செவிமடுக்கத் தவறிய கூட்டமைப்பை இலங்கை அரசு அணைத்துச் சென்று கால் தட்டுப்போட்டுக் கீழே விழுத்தி விட்டது.

இதுவே தமிழ் அரசியல் தரப்புக்குக் காலா காலமாகச் செய்யப்பட்டதாயினும் பட்டறிவின் அடிப்படையில் இலங்கை ஆட்சியாளர்களை நம்பாதீர்கள் என்று பல தடவைகள் கூறியும் எல்லாம் தமக்குத் தெரியும் யாரும் எந்த ஆலோசனையும் எங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற தலைக்கனத்தில் கூட்டமைப்பு எல்லாவற்றையும் போட்டுடைத்து விட்டது.

சர்வுதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று அப்போது வலியுறுத்தியிருந்தால், இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும்.

ஆனால் அரசுடன் இணங்கிச் சென்று உரிமையை பெறுதல் என்றவாறு இலங்கை அரசாங்கத்துடன் கூட்டமைப்பு இணைந்து செயற்பட்டது.

இதன்விளைவு தமிழ் மக்களுக்கு எதுவுமில்லை என்றாயிற்று.

சரி, இனி மேலாவது புதிய வியூகத்துடன் தமிழ் மக்களின் உரிமைக்கான குரலை ஒலிக்கச் செய்யலாமென்றால், பதவி ஆசை விடுவதாக இல்லை.

சுருங்கக்கூறின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சமகாலப் போக்கு தமிழ் மக்களின் உரிமை பற்றியதல்ல.

மாறாக தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பின் அரசியல் செல்வாக்கைத் தக்க வைப்பதும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பெற்றுக் கொள்வதுமே நோக்கமாக உள்ளது.

ஆக, கூட்டமைப்பின் போக்கு மாற்றமுற்றிருக்கின்ற நிலையில், தமிழ் மக்களுக்கான உரிமையை கூட்டமைப்பு பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை தொடர்ந்தால் அது தமிழ் மக்களை மேன்மேலும் வீழ்ச்சிப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

எனவே தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள நாங்களே உரக்கக் குரல் கொடுக்கத் தயாராக வேண்டும்.

அதில் ஒன்றுதான் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் தமிழ் மக்களுக்குச் சாதகமான தீர்மானத்தை ஏற்படுத்துவதற்காக அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் ஒன்றுபட்டு ஒருமித்து வலியுறுத்துவதாகும்.

இதைச் செய்யும்போது இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டுமென்று யார் கூறினாலும் அவர்கள் தமிழின அழிப்பாளர்கள் என்று பச்சை குத்தவும் தமிழ் மக்கள் தயங்கக்கூடாது.

# தலைமன்னாரில் கைதாகிய ஐந்து மீனவர்களும் விளக்கமறியலில்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட பாம்பன் பகுதியைச் சேர்ந்த 5 மீனவர்களையும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ரீ.சரவணராஜா நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

இந்தியா பாம்பன் பகுதியைச் சேர்ந்த 5 மீனவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விசைப் படகு ஒன்றில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு குறித்த மீனவர்கள் இலங்கையில் தலைமன்னார் கடற்பிராந்தியத்தில் வைத்து கடற்பாதுகாப்பில் ஈடுபட்ட கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 5 மீனவர்களும் அவர்கள் பயன்படுத்திய விசைப்படகினையும் கடற்படையினர் நேற்று வெள்ளிக்கிழமை காலை தாழ்வுபாட்டு கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தாழ்வுபாட்டு கடற்படையினர் குறித்த மீனவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி விசாரணைகளின் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைகள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில் குறித்த 5 மீனவர்களிடம் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

இதன்போது தாங்கள் 5 பேரும் விசைப் படகு ஒன்றில் மீன்பிடியில் ஈடுபட்டதாகவும் இதன்போது தமது படகில் இயந்திரக்கோளாறு ஏற்பட்ட நிலையில், தமது படகு இலங்கை கடற்பகுதிக்கு ஒதுங்கிய நிலையிலே தாம் கைது செய்யப்பட்டதாக தெரிவித்தனர்.

வாக்குமூலத்தை பதிவு செய்த நிலையில் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆஜர் படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ரீ.சரவணராஜா குறித்த மீனவர்களை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம-285)

## விஜயகலாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிரான வழக்கு, மே மாதம் 10ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை இது தொடர்பான வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த விசாரணையின் போது, சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கை சட்டமா அதிபருக்கு வழங்கப் பட்டிருப்பதாக திட்டமிட்ட குற்ற விசாரணைப் பிரிவு மன்றில் தெரிவித்த அதே வேளை சட்டமா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் போது வடக்கின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமாயின் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை மேலோங்க வேண்டும் என விஜயகலா மகேஸ்வரன் கருத்து தெரிவித்திருந்தார்.

இவரின் இந்த கருத்தானது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என தெரிவித்து அவருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## முன்னாள் போராளிகள் 8 பேருக்கு செயற்கை கால் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 8 பேருக்கு நெகிழும் தன்மையுடைய செயற்கை கால்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சகோதரத்துவத்தின் காலடிகள் நிதியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் பகுதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான நெகிழும் தன்மையுடைய செயற்கைக் கால்களை வழங்கி வைத்தார். (ம-101)

## உள சமூக மேம்பாட்டு மகிழ்வூட்டல்

யாழ்.மாவட்ட தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் நடத்தப்படும் **உள சமூக மேம்பாட்டு மகிழ்வூட்டல்** நிகழ்வு, நாளை 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மாவிட்டபுரம் நல்லிணக்கபுர விளையாட்டு மைதானத்தில் நல்லிணக்கபுர இளைஞர் குழுத்தலைவர் கா.பாக்கியராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலக உள சமூக நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கதிர் கலைமாறன், சிறப்பு விருந்தினர்களாக ஜே/233 கீரிமலை கிராம உத்தியோகத்தர் பி.பிரசாந், ஜே/231 நல்லிணக்கபுர கிராம உத்தியோகத்தர் த.ஜெயகரன், வடமாகாண **ONUR** இணை இணைப்பாளர் செ.ஜயந்திமதி, வட மாகாண **ONUR** ஆய்வு உதவியாளர் கி.ஜங்கரன், கௌரவ விருந்தினர்களாக சிவன் பவுண்டேசன் ஸ்தாபகர் க.வேலாயுதம், பே.ஜெயசூரியர்(பிரான்ஸ்), வடமாகாண **ONUR** நிர்வாக உத்தியோகத்தர் இரா. தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுககாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ் பிரதேசத்தில ஊர்காவற்றுறை, கரம்பன், மெலிஞ்சிமுனை, நாரந்தனை, பொன்னாச்சி கடையடி, நாரந்தனை நீர்ப்பாசன திட்டம், புளியங்கூடல், சரவணை, சுருவில, ஊர்காவற்றுறை நீதிமன்றம், ஆனைக்கோட்டை, மூத்தவிநாயகர் கோவில் பிரதேசம், நவாலி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், வேலக்கை பிள்ளையார் கோவில் பிரதேசம், அட்டகிரி, ஆக் வீதி உடுவில், உடுவில் ஒரு பகுதி, சங்குவேலி, மானிப்பாய் ஒரு பகுதி, பிப்பிலி, மருதனார்மடம் ஒரு பகுதி, பத்தனை, சுதுமலை, மாப்பியன் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி பிரதேசத்தில** வற்றாப்பளை, முள்ளியவளை, சிலாவத்தையிலிருந்து கொக்கிளாய் வரை, மாஞ்சோலை வைத்தியசாலை, விமானப் படை1 மற்றும் 2, 59 ஆவது படைப்பிரிவு முகாம், **SFHQ** வற்றாப்பளை, **Mari time pattu,** பலநோக்கு கூட்டுறவு சங்கம் குமுழமுனை, **12 VIR, 16ESR, FMA, SLASC** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, 623 ஆவது படைப்பிரிவு தலைமை விடுதி, மணலாறு ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** பெரிய கரைசல் பிரதேசம், ஓலைத்தொடுவாயிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, **Palmyrah House,** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னார் இராணுவ முகாம், மன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ஞானம் என்பது மனிதனிடம் இயல்பாக இருக்கும் விஷயம். அது வெளியில் இருந்து வருவது கிடையாது.
- தாயும் தந்தையும் வாழ்வில் மகிழ்ச்சி அடைந்தார்கள் என்றால் கடவுளும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறார்.
- அன்பின் மூலமாக செய்யப்படும் எந்தப் பணியும் இறுதியில் நிலையான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
- தன்னைத் தானே மனிதன் வெறுக்கக்கூடாது. இல்லாவிட்டால் அழிவினுடைய வாசல்கள் அப்போதே திறந்து விடப்படும்.
- பிறரிடம் பெற்றுக் கொள்வதால் பயனில்லை. மாறாக கொடுத்து மகிழ்பவனே பேறுபெற்றவன்.
- தவறுகளைப் பெரும்பேறாக கருதிப் போற்றுங்கள். நம்மை அறியாமலேயே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் அவை தான்.
- தன்னை மறந்து, மன ஒருமையுடன் செயலில் ஈடுபட்டால், அந்தப்பணி அழியாத சிறப்பை பெறும்.
- போராட்டம் இல்லாத வாழ்வில் எந்தவிதமான சுவையும் இருப்பதில்லை. தோல்வியும் வெற்றிக்கான கதவுகளைத் திறந்தே விடுகிறது.



# சிறந்த பந்தை சிக்சருக்கு விரட்டும் போது பந்து வீச்சாளரின் இதயம் நொருங்கும்

## வெற்றி குறித்து இங்கிலாந்து தலைவர்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக 361 ஓட்டங்கள் சேஸிங் செய்து வெற்றி பெற்றது குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் இயான் மோர்கன் பேட்டியளித்துள்ளார்.

பார்படாஸில் இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவு அணிகள் மோதிய முதலாவது ஒருநாள் போட்டி நடைபெற்றது. முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 8 விக்கெட் இழப்புக்கு 360 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக கிறிஸ் கெய்ல் 135 ஓட்டங்கள் விளாசினார்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி ஜேசன் ராய், ஜோரூட் ஆகியோரின் அபார சதத்தால் 48.4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 364 ஓட்டங்கள் விளாசி அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், இந்த வெற்றி குறித்து இங்கிலாந்து அணி தலைவர் இயான் மோர்கன் கூறுகையில்,

'ஆட்டத்தின் பாதியில் நாங்கள் என்ன பேசிக்கொண்டோம் எனில், இதற்கு முன்பாகக் கூட இத்தகைய நிலையில் இருந்திருக்கிறோம். நம்மால் மிகப்பெரிய இலக்குகளை விரட்டி வெற்றி பெற முடியும் என்றே நினைத்தோம்.

மேலும் எங்களிடம் நீண்ட துடுப்பாட்ட வரிசை உள்ளது. இந்தப் போட்டியில் நாங்கள் ஆரம்பித்த விதம் வெற்றிக்கான உத்வேகத்தை பெற்றுத் தந்தது ஜேசன் ராய். ஜானி பேர்ஸ்டோவின் தனித்துவம் தான். ஓட்ட விகிதம் எகிறியதால் ஒரு கட்டத்தில் கூட தோற்று விடுவோம் என்று நாங்கள் நினைக்கவில்லை.

நாங்கள் மிகவும் நிலையான ஓட்ட விகிதத்தில் சென்று கொண்டிருந்தோம். எந்த அணியின் தொடக்க பந்துவீச்சாளர்கள் நெருக்கும்போது, எதிராக ஆடுவது மட்டும் கடினமல்ல. கப்டன்சி செய்வதும் கடினம் தான். சிறந்த பந்தை பவுண்டரிக்கோ, சிக்சருக்கோ தூக்கி அடிக்கும்போது, அது பந்து வீச்சாளர்களின் இதயத்தை சுக்கு நூறாக்கும்.

ஜேசன் ராய் இப்படிப்பட்ட ஒரு ஆதிக்க இன்னிங்ஸை ஆடுவது பெரிய இலக்குகளை விரட்டுவதில் ஒரு உத்வேகத்தை கொடுக்கிறது. ஜோ ரூட்டின் சதத்தை மக்கள் மறந்து விடுவார்கள். ஆனால், அவர் அதனை பார்ப்பதற்கு மிகவும் எளிது போல் செய்து விட்டார். அவரைப் போன்ற பாறைத்தனமான ஒரு வீரர் இருப்பது பெரிய பலம் என தெரிவித்துள்ளார். (க)

# அரையிறுதிக்கு முன்னேறியது ஆவரங்கால் மத்தி வி.க



அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக திருகுமரன்-லஜிதன் ஞாபகார்த்தமாக நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலாவது சுற்றை 30:28 என்ற புள்ளிகளை அதிரடியாக கைப்பற்றிய சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அடுத்த 3 சுற்றுக்களையும் சிந்துவின் அசத்தல் ஆட்டத்துடன் 25:15, 25:20,25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

போட்டியின் சிறந்த வீரராக ஆவரங்கால் மத்தியின் சிந்து தெரிவு செய்யப்பட்டார். (க)


# அவுஸ்திரேலியாவுடனான தொடரை சரியாகப் பயன்படுத்தினால் உலகக் கிண்ண அணியில் விஜய்க்கு இடம் கிடைக்கும்

இந்திய அணியின் இளம் வீரரான ஹார்திக் பாண்ட்யா காயம் காரணமாக அவுஸ்திரேலியா அணிக்கெதிரான தொடரிலிருந்து விலகியுள்ளதால், தமிழக வீரர் விஜய் சங்கர் இதை சரியாக பயன்படுத்திக் கொண்டால், அவருக்கு உலகக்கோப்பை தொடரில் இடம் பெறுவதற்கு சரியான வாய்ப்பாக அமையும்.

அவுஸ்திரேலியா அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கான இந்திய அணியில் இடம் பெற்றிருந்த ஹார்திக் பாண்ட்யா காயம் காரணமாக தொடர் முழுவதிலுமிருந்து விலகியுள்ளதால், அவருக்கு பதில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து மண்ணின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தமிழக வீரர் விஜய் சங்கர் இடம் பிடிப்பார் என்று கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது.





அப்படி விஜய்சங்கருக்கு அணியில் இடம் பிடித்தால், உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியில் இடம் கிடைப்பதற்கு இது ஒரு சரியான வாய்ப்பாக அமையும்.

ஏனெனில் இந்திய அணி உலகக்கோர்ப்பை தொடருக்கு முன்பு கடைசியாக மோதும் தொடர் இது தான், இதனால் இந்த தொடரில் சிறப்பாக விளையாடும் வீரர்கள் உலகக்கோப்பைக்கு தொடருக்கு இடம் கிடைக்க வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக விஜய் தனக்கு கிடைக்கப்போகும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி நல்லதொரு ஆட்டத்தை கொடுத்தால், உலகக் கோப்பை தொடரில் பார்க்கலாம். (க)

# அரியாலை கரப்பந்தாட்ட தொடர் இறுதியில் ஆவரங்கால் மத்தி



அரியாலை சுதேசிய திருநாள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்ட தொடரில் கடந்த 19 ஆம் திகதி அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணி மட்டுவில் மோகன்தாஸ் அணியை 25:11,25:20,25:20 புள்ளிகள் அடிப்படையில் 3:0 ரீதியில் வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது. இறுதிப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (க)

# 55 பந்துகளில் 147 ஓட்டங்கள் வெளுத்துவாங்கிய இந்திய வீரர்



இந்திய அணியின் இளம் வீரரான ஷ்ரேயஸ் அய்யர் உள்நாட்டு இருபது-20 தொடரில் 55 பந்துகளில் 147 ஓட்டங்கள் அடித்து அபார சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவில் உள்ளூர் தொடரான முஷ்டாக் அலி ட்ராபி தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ரகானே தலைமையிலான மும்பை அணியும் னைலீஸ் லமி சானே தலைமையிலான சிக்கிம் அணியும் மோதின.

அதன்படி முதலில் ஆடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 258 ஓட்டங்கள் எடுத்தது.

அதன்பின் ஆடிய சிக்கிம் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 104 ஓட்டங்கள் எடுத்து 154 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

இப்போட்டியில் மும்பை அணிக்காக விளையாடிய இளம் வீரர் ஸ்ரேயஸ் அய்யர் 55 பந்துகளில் 7 பவுண்டரிகள் 15 சிக்சர்களுடன் 147 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்மூலம் ரிஷப் பாண்ட்டின் அதிகபட்க இருபது-20 ஸ்கோரான ஆட்டமிழக்காமல் 128 ஓட்டத்தை முறியடித்து ஸ்ரேயஸ் அய்யர் சாதனை புரிந்தார்.

குறிப்பாக இந்த இன்னிங்சில் சிக்கிம் மித வேகப்பந்து வீச்சாளர் டாஷி பல்லா என்பவரின் ஒரே ஓவரில் அய்யர் 35 ஓட்டங்கள் விளாசினார்.

அதேபோல் தமிழ வீரர் முரளி விஜய் அடித்த 11 சிக்சர்கள்தான் அதிக சிக்சர்களுக்கான சாதனையாக இருந்து வந்தது.

தற்போது அந்தச் சாதனையையும் 15 சிக்ஸர்கள் அடித்து ஸ்ரேயஸ் அய்யர் முறியடித்துள்ளார். (க)

# பூப்பந்தாட்ட தொடர் றெமிசன்-துசாந்தன் சம்பியன்



யாழ்.பூப்பந்தாட்ட சங்கம் நடத்திய பூப்பந்தாட்ட தொடரில் யாழ். முன்னணி வீரர்களான லோ.றெமின்சன், தி.துசாந்தன் இணை சம்பியனானது. 15,16,17 ஆம் திகதிகளில் அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய உள்ளரங்கில் இடம் பெற்ற போட்டியின் இறுதியாட்டத்தில் றெமின்சன், துசாந்தன் இணையை எதிர்த்து கீர்த்தனன் மேசாக் இணை மோதியது. முதல் இரண்டு செற்களையும் றெமின்சன், துஷாந்தன் இணை 21,12,23,21 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஸ்கைப்பற்றி கிண்ணத்தை தம்வசம் பெற்றனர். (க)

## யாழ்.போதனாவில் சிதைந்த கை

# பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மூலம் காப்பாற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் கே.இளஞ்செழியபல்லவன், தும்பு அடிக்கும் இயந்திரத்துக்குள் தவறி கைகள் இரண்டும் சிதைவடைந்த நிலையில் சேர்க்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவரின் இடது கை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மூலம் காப்பாற்றப்பட்டது.

எனினும் வலது கை அறுவைச் சிகிச்சைக்குட்படுத்த முடியாத நிலையில் அகற்றப்பட்டது.

யாழ்ப்பாணம்போதனா வைத்திய சாலை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்கள் கே.இளஞ்செழியபல்லவன், எஸ்.செல்வகணேஷ் ஆகியோர் தலைமையிலான மருத்துவ அணியின் சுமார் 7.00 மணி நேரப் போராட்டத்தின் பின் இடது கை காப்பாற்றப்பட்டது.

கிளிநொச்சி முரசுமோட்டையைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க 5 பிள்ளைகளின் தாயார், தும்பு அடிக்கும்தொழிலில்ஈடுபட்டு வருகிறார். அவர் நேற்று முன்னதினம் மாலை தும்படிக்கும் போது, தும்படிக்கும் இயந்திரத்துக்குள் இரண்டு கைகளும் சிக்குண்டு சிதைவடைந்தன.

அவர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து நேற்று இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று அதிகாலை வரை சுமார்7.00 மணிநேரம் முன்னெடுக்கப்பட்ட சத்திரசிகிச்சையின் பின்னர் பெண்ணின் இடது கை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மூலம் காப்பாற்றப்பட்டது. எனினும் வலது கை முற்றாக அகற்றப்பட்டது. (ம-3,9)

## மன்னார் புதை...

வின் புளோரிடாவில் உள்ள பீட்டா நிறுவனத்திற்கு காபன் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதில் ஐந்து மாதிரிகளின் பரிசோதனை அறிக்கையை பீட்டா இணையத்தளத்தில் இருந்து, புதைகுழி அகழ்வு பணியில் ஈடுபடும் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ச பெற்றிருந்தார்.

ஆறாவது மாதிரியின் பரிசோதனைக்கான மூலப்பொருட்கள் இன்மையால் பரிசோதனை தாமதமடைந்துள்ளது. மூலப்பொருட்களை பெற்று பரிசோதனை அறிக்கையை தயாரிக்க சிறிய கால அவகாசம் தேவைப்படும் என காணாமல் போனவர்களிற்கான பணியகம் தெரிவித்துள்ளது.

பீட்டா நிறுவனத்தின் இணையத்திலிருந்து பெறப்பட்ட காபன் அறிக்கையை, மன்னார் நீதவான் நீதிமன்ற பதிவாளரிடம், சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ ஒப்படைத்துள்ளார். எனினும், உத்தியோகபூர்வமாக அறிக்கை அனுப்பிவைக்கப்படும் போதே வெளிவரும் என நீதிபதி அறிவித்திருந்தார்.

மீட்கப்பட்ட மனித எச்சங்களின் தொடை எலும்பு, பல் போன்ற பகுதிகளே ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்றைய தினமும் 149வது நாளாக மனித புதைகுழி அகழ்வுப்பணிகள் இடம் பெற்றன. (ம-3)

## 19வது அரசியல...

புத்தளம், ஆனமடுவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

1947 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வரும் சம்பிரதாயத்திற்கு அமையவே அரசியலமைப்பு பேரவை வழங்கும் நியமனங்கள் மற்றும் நிராகரிப்புகள் சம்பந்தமான காரணங்கள் கூறப்படுவதில்லை.

1947 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் நீதி சேவைகள் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு என்பன வழங்கும் நியமனங்கள் மற்றும் நிராகரிப்புகள் தொடர்பான எந்த காரணங்களை முன்வைத்ததில்லை.

இந்த நடைமுறையை மாற்ற முயற்சித்தால், நீதி சேவைகள் ஆணைக்குழு எடுக்கும் அனைத்து தீர்மானங்கள் குறித்து காரணங்களை வெளியிட நேரிடும்.

அப்போது பல வாத விவாதங்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது போய்விடும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## சிங்களவரின்...

வராப்பிட்டியே கவம்பதி தேரரிடம் ஆசிகளையும் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து நாவற்குழி சிங்கள குடியேற்றத் திட்ட மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மீள்குடியேறிய தமக்கு அடிப்படை வசதிகள் பல இல்லாமலிருப்பதாகவும், அதிகாரிகள் அவற்றை பெற்றுத் தருவதில்லையென்றும் மக்கள் குற்றம்சாட்டினர்.

யாழில் மீள்குடியேறிய சிங்கள மக்கள் பல குறைபாடுகளுடன் வாழ்வதை அவதானிக்க முடிவதாக தெரிவித்த சம்பிக்க ரணவக்க, அவற்றை உடனடியாக தீர்ப்பதாகவும் தெரிவித்தார்.

நாவற்குழியிலுள்ள வீடமைப்பு அதிகாரசபையின் காணியில் ஏற்படுத்தப்பட்ட சிங்கள குடியேற்றம், அடாத்தானது என்ற விமர்சனம் எழுந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வாள்வெட்டுக்கு...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

நேற்று வெள்ளிக்கிழமை காலை வேளை தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் சடலத்தை சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் சம்பவம் தொடர்பில் ஆரம்ப புலன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு முற் பகல் வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனையடுத்து, சடலத்தை மீட்ட பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன், ஆரம்ப விசாரணையில் ஈடுபட்ட போது உயிரிழந்துள்ளவர் கரன் என்று அழைக்கப்படும் தருமபுரம் 6ஆம் யூனிட் பகுதியைச்சேர்ந்த அரச சிங்கம் கௌரியானந்தம் (வயது 28) என்ற ஒரு பிள்ளையின் தந்தை என்றும் குடும்ப பிரச்சினைகள் காரணமாகவே இக் கொலை நடைபெற்றுள்ளதாகவும் கண்டறிந்துள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். மேலும்கொலையுடன்தொடர்புடைய ஒருவர் நேற்று மதியம் தருமபுர பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## மணல் தட்டு...

ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள யூரோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாது தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் கட்டடப் பொருள் விற்பனையாளர்கள், மணல் விநியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டதோடு மணல் விலையேற்றம் மற்றும் மணல் தட்டுப்பாடு போன்றவற்றை நிவர்த்தி செய்யக் கோரி பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மகஜர் ஒன்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இப் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் நேரடியாக சென்று கலந்துரையாடவுள்ளதாகவும் மேற்படி கோரிக்கைகளுக்கு உரிய தீர்வினை பெற்றுத்தருவதாகவும் பேராசிரியல் திஸ்ஸ விதாரண உறுதியளித்துள்ளார். (ம-3,10)

## போரில் ஏற்பட்ட...

அந்த போரின் தாக்கத்தை நாங்கள் இன்னமும் தாங்க வேண்டிய ஒரு சமூகமாக இருக்கின்றோம் என்று வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

சகோதரத்துவத்தின் காலடிகள் அமைப்பினால் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நேற்று ஏற்பாடுசெய்யப்பட்ட நெகிழ்வுத்தன்மையுடைய செயற்கைக் கால்கள் வழங்கும் நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந் நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாங்கள் ஒரு விதத்தில் மகிழ்ச்சியடைந்தாலும் இன்னொரு விதத்தில் மகிழ்ச்சியடைய முடியாத ஒரு நிகழ்வாக இது இருப்பது எங்களுக்கு புரிகின்றது. போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்டது. அந்த போரில் ஏற்பட்ட அனேக வேதனைகள் சித்தமாக நாங்கள் இன்று எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள், எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள், எங்கள் மொழியை சேர்ந்தவர்கள், எங்கள் கலாசாரத்தை சேர்ந்த சிலரை இந்த நிலையில் பார்ப்பதற்கும் அவர்களின் வாழ்க்கை கதையை கேட்பதற்கும் கட்டாயப்பட்டுள்ளோம்.

ஆகையினாலே இந்த நிகழ்ச்சி என்னை பொறுத்தவரையில் சந்தோசம் கொடுக்கும் நிகழ்ச்சியாக அல்ல. ஆனால் நம்பிக்கை கொடுக்கும் ஒரு நிகழ்வாக இருக்கும். ஏனெனில் நீங்கள் திரும்பவும் வாழ்க்கையை பெறவேண்டும். அந்தளவுக்கு தைரியமாக ஒரு காரியத்தை குறித்து உங்களை அர்ப்பணித்து இருந்த காலம் இருக்கிறது. அந்த காலத்தை போலவே திரும்பவும் வாழ்க்கையை சீர்செய்து கொள்வதற்கான நம்பிக்கை வர வேண்டும். அந்த நம்பிக்கையை கொடுக்கும் நிகழ்வாக நான் இதனை கருதுகின்றேன் என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

ஒரு சமுதாயத்தின் நாகரிகமென்பது அந்த சமுதாயத்தில் இருக்கின்ற வலுவற்றவர்களை அது எந்தளவிற்கு தாங்கிக்கொள்கின்றது, எந்தளவிற்கு அது உள்வாங்கிக் கொள்கின்றது என்ற விடயமாகும். இன்று உங்களுக்கு கொடுக்கப்பட்டது வெறுமனே ஒரு செயற்கையான பாதணிமட்டுமல்ல ஒரு புதிய வாழ்க்கையின் அத்தியாயம் என்று நீங்கள் எண்ண வேண்டும்.

நான் ஆளுநராக வரவேண்டும் என்று கனவுகாணவுமில்லை சண்டைபோடவுமில்லை. நான் தற்செயலாக ஆளுநராக மாறினேன் என்று தான் சொல்லவேண்டும். ஆனால் நான் ஆளுநராக இருக்கும் காலம் எவ்வளவோ அதுவரை சமுதாயத்தின் விளிம்பிலே உள்ள மக்களுக்காக சேவைபுரிய நான் என்னை அர்ப்பணித்திருக்கின்றேன் என்றும் ஆளுநர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## முல்லையில் பிறந்திருந்தால்...

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஞானசார தேரரை- வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில், அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, மனோ கணேசன், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து நலம் விசாரித்தனர்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று, அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

•நான் சிங்கள பௌத்தனாக பிறந்ததால், எனது இனத்திற்காக போராடி இப்போது சிறையில் இருக்கிறேன்.

நான் முல்லைத்தீவில் பிறந்திருந்தால், ஒரு தமிழனாக போராடி, ஒரு தமிழ்ப் புலியாக இதே சிறையில் இருந்திருப்பேன் என்று ஞானசார தேரர் கூறினார் என அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## வலிந்து காணாமல் ஆக்கப்...

அனைவரையும் ஆதரவு வழங்குமாறு வேண்டியும் நிற்கின்றது.

இலங்கைத்தீவில் காலாதி காலமாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் தமிழ் மக்களிற்கு எதிரான அடக்குமுறைகள்தொடர்ந்து கொண்டே வந்துள்ளன. அத்தகைய தமிழ் மக்களிற்கு எதிரான அடக்குமுறைகளுள் ஒன்றாகவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரமும் காணப்படுகின்றது.

உள்ளக விசாரணைப் பொறிமுறையினையும் உள்ளக கலப்பு விசாரணைப் பொறிமுறையையும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் தொடர்ந்தும் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையினால் மேற்படி நடவடிக்கைகளிற்கு கால அவகாசம் வழங்கப்படுவதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறியது தொடர்பில் பொறுப்புக் கூறும் கடப்பாட்டை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தவறுவதனால் அந்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நீதிமன்ற விசாரணைப் பொறிமுறையின்கீழ் அதனை நிறைவேற்ற வேண் டிய அவசியம் எழுவதை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கவனத் தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்மக்களிற்கு எதிரான அடக்குமுறைகளிற்கான நியாயமான தீர்வினை சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றினூடாகவே சாத்தியமாக்க முடியும் ஐ.நா. பாதுகாப்புச்சபை ஊடாக இலங்கை விவகாரம் கையாளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)


## வீடு தேவை

பருத்தித்துறையில், வியாபாரிமூலை, இன் பருட்டி, பொலிகண்டி, சக்கோட்டை பகுதியில் வாடகைக்கு அல்லது விலைக்கு வீடு தேவை.

**தொலைபேசி இல : 077 168 1697** (C-5593)


### தன நிதானய

திகதி 2019-02-22
சீட்டிழுப்பு இலக்கம் 118
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 07 69 73 78

### மெகா பவர்

திகதி 22/02/2019
சீட்டிழுப்பு இலக்கம் 348
X 24 — வெற்றி இலக்கங்கள் 01 29 31 55

### மஹஜன சம்பத

திகதி 2019/02/22
சீட்டிழுப்பு இலக்கம் 3861
ஆங்கில எழுத்து E — வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 1 7 5 1 5

### கொவிசெத

திகதி 2019.02.22
சீட்டிழுப்பு இலக்கம் 2043
ஆங்கில எழுத்து P — வெல்லப்பட்ட இலக்கங்கள் 21 42 69 78

தேசிய லொத்தர் சபை

## இனப்படுகொலை...

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பழையதை மறப்போம், மன்னிப்போம் என கூறியிருந்தார். இந்த கருத்து தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை கருத்து வெளியிடும்போதே, அமைச்சர் மனோ கணேசன் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர், இனப்படுகொலை மறக்கக் கூடிய விடயம் அல்ல. வரலாற்றை மறக்காமலிருந்தாலே மீண்டும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் தடுக்க முடியும். ஆனால், மன்னிப்பதா இல்லையா என்பதை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே முடிவு செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.(ம-3)

## ஊடகத்துறை...

மாணம் செய்துகொண்டுள்ளார்.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சராக பதவி வகித்து வரும் மங்கள சமரவீர நேற்று பிற்பகல் ஊடகத் துறை அமைச்சு பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சு பதவிக்கு மேலதிகமாக ருவான் விஜேவர்தனவுக்கு அமைச்சரவை அந்தஸ்தற்ற ஊடகத்துறை அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

எந்த அமைச்சுக்காவது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் இல்லாத சூழ்நிலையில், அந்த அமைச்சுக்கான அமைச்சரவை பொறுப்பு அரசியலமைப்புச்சட்டத்தின் மூலம் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது(ம-3)


### கட்டார் வேலைவாய்ப்பு

எலக்ரீஷியன், பிளம்பர், மேசன், பெயின்ரர், பார் பென்டர் டிரைவர், ரயர் மெக்கானிக், வாகன பெயின்ரர், சமையல்காரர்

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

முற்றிலும் இலவச பயணம்

077 00 38 215 021 221 9 221 (C-6587)

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

### Australia, New Zealand, Canada Poland, Switzerland, Malaysia

Student Visa - Work Visa - Migration ஏற்பாட்டுடன்

Travel, Tourism & Hotel Management

With FREE ENGLISH (3 - 6 Months)

Fast Track - Entry Level - Advanced Level

வெளிநாடு செல்லும் வரையில் உள்நாட்டு வேலைவாய்ப்பு!

077 36 16 798
021 221 9 221

SIKARAM ACADEMY
Business • Hospitality • Media
FAST TRACK to CAREERS
Sri Lankan Enterpreneur of the Year 2017

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் (இஷாரா ரெக்ஸ் → ரீன் கேர்ல் அருகே)

### வெளிநாட்டில் வேலை வாய்ப்பு

அவுஸ்திரேலியாவிற்கு அருகில் உள்ள பப்புவா நியூகினியாவில் வேலைவாய்ப்பு

பதவி - கல்வி நிறுவன முகாமையாளர்
சம்பளம் - 250'000 (இலங்கை ரூபா)
தகுதி - பட்டதாரிகள் (ஆண்கள்)
நன்மைகள் - தங்குமிடம், வாகனம், விமான பயணச்சீட்டு, காப்புறுதி மேலும் பல சலுகைகள்.

V2 TRAVELS

0768226243 v2vacancies@gmail.com (சி-6598)

### Vacancy

Following candidates required by one of the leading hotels in jaffna, Tilko City Hotel.

- PA / Secretary to Managing Director
- Receptionist

Fluency in English and IT
Forward your resume to tilko.tilak@gmail.com
**For more details - 077 769 6443**

**Tilko Jaffna City Hotel**
**70/6, K.K.S Road, Jaffna.** (7632)

### இலவச புற்றுநோய் பரிசோதனையும் கருத்தரங்கும்

*இடம் : சுகாதார நலன்புரி நிலையம், கந்தரோடை.*
*காலம் – 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி.*

புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வு பற்றிய இலவச புற்றுநோய் பரிசோதனையும், கருத்தரங்கும். புற்றுநோய் உதவி வடக்கு கிழக்கு அமைப்பு (CANE) அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையும், தொற்றா நோய் தடுப்புப் பிரிவும் இணைந்து நடாத்தும் இவ் நிகழ்வில் 30 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம். தொற்றாநோய் பரிசோதனைகளான நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம் என்பனவும் பரிசோதிக்கப்படும்.

- பரிசோதிக்க விரும்புபவர்கள் 23.02.2019 சனி இரவு 8.00 மணிக்கு பின் உணவு உண்ணக் கூடாது.
- இரத்தப் பரிசோதனைக்கான இரத்த மாதிரி 24.02.2019 காலை 8.00 மணிக்கு எடுத்த பின்பு சிற்றுண்டி (இலைக்கஞ்சி, வடை) வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 077 129 1582 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்

சுகாதார நலன்புரி நிலையம், கந்தரோடை.

(7621)

### FLC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்சு

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2. (C-6495)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 05.03.2019, செவ்வாய் 2.15 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் :06.03.2019, புதன 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வசிக்கும் 31 வயதுள்ள செவ்வாய் குற்றம் இல்லாத யாழ். மணமகனுக்கு மணமகளைத் தேடுகிறோம், கனடாவில் வசிக்கும் 38 வயதுடைய செவ்வாய் குற்றம் இல்லாத அத்த நட்சத்திரத்தை உடைய ஆணுக்கு அழகான மணமகளையும் கனடாவில் வசிக்கும் 40 வயதுடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **Facebook Id: sorkham matrimony**
**TP & Viber: 0014166661855, 0016475043336** (C-6596)

### Vacancies

**Job! Job! Job!... 076 770 7759, 077 999 4807**

நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை SMS செய்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை.



- நிர்வாக அதிகாரி
- செயல்திட்ட அதிகாரி
- மேற்பார்வையாளர்
- அலுவலக உதவியாளர்
- தங்கும் இட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.

■ பயிற்சி காலம் 15,000/= - 20,000/=
■ பின் குறைந்தது 45,000/= (C-7535)

### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

**தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)** (7570)

### வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் உள்ள பான்சிக் கடைக்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை.

**தொடர்பு: 077 311 7875** (7634)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS (C-5439)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

### உடனடி வேலைவாய்ப்பு

#### கவர்ச்சிகர சம்பளம்

யாழ்/ காங்கேசன்துறையில் விரைவில் திறக்கப்படவுள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணி நிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **வரவேற்பாளர்கள் (பெண்கள்)**
- **காசாளர் (ஆண், பெண்)**
- **முகாமையாளர் (ஆண்)**
- **கணக்காளர் (ஆண், பெண்)**

மேற்படி பதவி நிலைக்கு ஆர்வமும், திறமையும் தகுதியும் உடையவர்கள் தங்கள் புகைப்படம் (கலர்) அடங்கிய சுயவிபரகோவையை **meerarahim@hotmail.co.uk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 25.03.2019க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**ஆங்கில மொழி மற்றும் சிங்களம் சரளமாக பேச தெரிந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.** (7629)

### Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**A/L தொழில்நுட்பப் பிரிவு - 2021**

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**

பரீட்சை முடிவுகள்

| பெயர் | புள்ளிகள் | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|---|
| ரா.விதுஷா | 95 | கி.ஜயந்திகா | 79 |
| கே.ஹரிகரன் | 87 | பா.பிரவின் | 78 |
| ற.துவாரகன் | 85 | எஸ்.பெனுஷா | 77 |
| ரீ.விஜயசீலன் | 82 | சி.கபில்காந்தன் | 77 |
| ஜெ.லதுஷா | 82 | தி.கவிதரன் | 76 |
| ஜெ.சர்மினா | 82 | எஸ்.கேதுஷா | 76 |
| பா.சகானா | 82 | வி.சுகந்தன் | 76 |
| கே.கோபிகா | 81 | யோ.கம்சுயன் | 75 |
| வி.டினோசாந் | 81 | கி.ஆர்த்திகன் | 72 |
| வி.சதுர்சனா | 80 | ச.திவ்வியன் | 70 |
| எம்.கேனுஷன் | 79 | ச.தனுக்வித்தியா | 70 |

**சனி மற்றும் ஞாயிறு 8.30 am - 12.30 pm**

**தொடர்பு: 077 017 5346** (C-6596)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.